E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஏப்ரல் 22 சனிக்கிழமை


# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 94 | Saturday 22, April, 2023 | 11 பக்கங்கள்

## பிறப்புச் சான்றிதழ் இல்லாவிடினும் NIC

### ஆட்பதிவு ஆணையாளர் தெரிவிப்பு



பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டைகளைப் பெற முடியாமல் இருக்கும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் 06

## சமாதானம், சகோதரத்துவம் கொண்ட நாடாக மாற்றுவோம்

### ரமழான் பெருநாள் செய்தியில் ஜனாதிபதி ரணில்



முஸ்லிம்கள், ரமழான் மாத நோன்பை நிறைவு செய்து, நாட்டில் ஏற்பட்டுள்ள சுமூகமான சூழ்நிலையில் இவ்வருட நோன்புப் பெருநாளை கொண்டாடுகின்றனர். அது அனைவருக்கும் ஆறுதலாக இருக்கும் என்பது உறுதியென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ரமழான் காலம் மற்றும் நோன்புப் பெருநாள் என்பன மதிப்புமிக்க மத, ஆன்மீக மற்றும் சமூக அமைப்பைக் கொண்டுள்ளன. அந்த விழுமியங்களையும் பாதுகாத்து நேர்மையாக நோன்பு நோற்று முஸ்லிம்கள் தம்மை அர்ப்பணிக்கின்றனர். 06

## சமூகத்துக்கான போதனைகள் நிறைந்த ரமழான் பண்டிகை

### பிரதமர் தினேஷ் பெருநாள் வாழ்த்து



இலங்கை சமூகத்தின் இஸ்லாமிய சகோதரத்துவத்தைப் பாதுகாத்து, அவநம்பிக்கை, சந்தேகம் நீங்கிய சிறந்ததோர் சமூகத்துக்கான போதனைகளை உறுதியாகக் கடைப்பிடிப்போமென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"முஸ்லிம் சமூகத்தினர் பன்னெடுங்காலமாக ரமழான் காலத்தில் தங்களின் சமயக் கிரியைகளிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டு, ஏனையவர்களுக்கு உதவி உபகாரங்களைச் செய்து நாட்டின் கலாசார மற்றும் சமய 06

## புதிய இலங்கையை உருவாக்க திடசங்கற்பம் பூணுவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் பெருநாள் செய்தி



ரமழான் நோன்பு காலம் முடிந்த பிறகு உலகெங்கிலுமுள்ள இஸ்லாமியர்கள் அவர்களின் பிரார்த்தனைகளை அல்லாஹ் ஏற்றுக்கொள்வான் என்ற நம்பிக்கையுடன் ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடுகிறார்களென, தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இந்தப் பெருநாளை உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்கள் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூருகின்றனர். 06

## 1,800 நேரடி மற்றும் 10,500 மறைமுக வேலைவாய்ப்பு; 400 மில். டொலர் முதலீடு

# கொழும்பு துறைமுகத்தில் பாரிய கேந்திர நிலையம்



**தெற்காசியாவிலேயே மிகப்பெரிய வர்த்தக சேவை வழங்கும் நிலையமாக நிர்மாணிப்பதற்கான வரலாற்று ஒப்பந்தம் கைச்சாத்தானது**

கொழும்பு துறைமுகத்தில் தெற்காசியாவின் மிகப்பெரிய வர்த்தக மற்றும் விநியோக கேந்திர நிலையத்தை நிர்மாணிப்பதற்கான வரலாற்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சுமார் 1,800 நேரடி வேலை வாய்ப்புகளையும் 10,500 மறைமுக வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும் விதத்தில் 400 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் இத்திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

இலங்கைக்கான முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் சைனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் கம்பனி லிமிடெட், அக்சஸ் இன்ஜினியரிங் பி.எல்.சி. மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை ஆகியவை கொழும்புத் துறைமுகத்தில் தெற்காசியாவின் மிகப்பெரிய வர்த்தக மற்றும் விநியோக கேந்திர நிலையத்தை நிர்மாணிப்பதற்கான வரலாற்று ஒப்பந்தத்தில் நேற்று கையொப்பம் செய்துகொண்டுள்ளன.

இந்த திட்டத்துக்கான மொத்த முதலீடு 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது கொவிட் 19 க்கு பின்னரான பாரிய முதலீடாக உள்ளதென, துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்புச் செயல்பாட்டில் இலங்கைக்கு உதவிய சீனாவுக்கு நன்றி தெரிவிப்பதோடு, பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையில் முதலீடு செய்த சைனா மெர்ச்சன்ட்ஸ் 06

## நோன்பு பெருநாள் இன்று

### கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவிப்பு

**ஸாதிக் ஷிஹான்**

ஹிஜ்ரி 1444 புனித ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் பல பாகங்களிலும் தென்பட்டதாக ஊர்ஜிதம் செய்யப்பட்டதை அடுத்து புனித நோன்புப் பெருநாளை (22) இன்று சனிக்கிழமை இலங்கையில் கொண்டாடுவது என கொழும்பு பெரிய பள்ளிவாசல் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று (21) மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து இடம்பெற்றது. 06




## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்தியது

### ஆனால் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமை பெரும் மனவருத்தம்

**தாக்குதல் இடம்பெற்று 04ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு**



நாடு சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளில் உருவாக்கிக்கொள்ள முடியாது போன இனங்களுக்கிடையிலான மற்றும் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் உயிர்த்த ஞாயிறு 06

## A/L தமிழ்மொழி விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பம்

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் நேற்று (21) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்து சமயம், கிறிஸ்தவம், இந்து நாகரிகம், பரதநாட்டியம், கீழைத்தேய சங்கீதம், கர்நாடக சங்கீதம், மேற்கத்திய சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் மற்றும் ஹிந்தி ஆகிய பாடங்களுக்கான பணிகளே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர தெரிவித்தார். 06

### சமூக சக வாழ்வை சீர்குலைக்க சில சக்திகள் முயற்சி

## அக்குறணை சம்பவம் தொடர்பில் உண்மையை கண்டறியவும்




**IGP க்கு ஜம்இய்யதுல் உலமா சபை அவசர கடிதம்**

அக்குறணையில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படலாமென தெரிவிக்கப்பட்ட தகவலின் உண்மைத்தன்மையை கண்டறிந்து சமூகங்களுக்கிடையிலான சக வாழ்வை சீர்குலைக்கும் தீய சக்திகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை தெரிவித்துள்ளது.

அக்குறணை பிரதேசத்தில் குண்டுத்தாக்குதல் தொடர்பாக 06

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்

## நீதிக்காக காத்திருப்போருக்கு அமெரிக்கா துணை நிற்கும்




**ஜூலி சங் டுவிட்டரில் பதிவு**

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களையும் அமெரிக்கா கௌரவிப்பதோடு, நீதிக்காகக் காத்திருப்பவர்களுடன் ஐக்கியமாக நிற்கிறதென, இலங்கைக்கான அமெரிக்கத் 06

### Prednisolone என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட

## இந்திய கண் சொட்டு மருந்து பயன்படுத்த தற்காலிக தடை

### சுகாதார அமைச்சு விசேட அறிவுறுத்தல்



இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Prednisolone என்ற கண் சொட்டு மருந்துகளை உடனடியாக பயன்பாட்டிலிருந்து நீக்குமாறு சுகாதார 06

## வியட்நாமிலிருந்து மேலும் 23 பேர் நாடு கடத்தப்பட்டனர்

### இலங்கை வந்துள்ளதாக கடற்படை தெரிவிப்பு



சட்டவிரோத குடியேற்றத்துக்காக கடல் வழியான பயணத்தின்போது, வியட்நாமிய கடற்பரப்பில் மீட்கப்பட்ட 303 இலங்கையர் அடங்கிய குழுவிலிருந்த மேலும் 23 இலங்கையர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளதாக, கடற்படையினர் நேற்று தெரிவித்தனர். 2022 நவம்பர் 7ஆம் திகதியன்று வியட்நாமுக்கு அப்பால் கடலில் இந்தப் படகு 06

## 71,000 விவசாயிகளுக்கு இலவசமாக யூரியா உரம்

### விநியோகிக்க விவசாய அமைச்சு நடவடிக்கை



ஏழு மாவட்டங்களிலுள்ள 71,000 விவசாயக் குடும்பங்களுக்கு தலா 50 கிலோ யூரியா உர மூட்டைகளை விவசாய அமைச்சு விநியோகிக்கவுள்ளது.

யூரியா உரம் மற்றும் விவசாய உபகரணங்களை அமைச்சிடம் கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு, ஹம்பாந்தோட்டை விவசாயப் பூங்காவில் நடைபெற்றபோது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 06

## 'வசத் சிரிய - 2023' புத்தாண்டு விழா இன்று கோலாகலமாக ஆரம்பம்

### போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு பணப்பரிசில்கள்




கொழும்பு, சங்கிரீலா திடலில் இன்று 22ஆம் திகதி நடைபெறும் 'வசத் சிரிய 2023' தமிழ் சிங்கள புத்தாண்டுப் போட்டி நிகழ்வுகளில் புத்தாண்டு அழகன் அழகிப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி மற்றும் சைக்கிளோட்ட போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பெருமளவில் கிடைத்துள்ளன. 06

## கொவிட் தொற்று காரணமாக நாட்டில் மீண்டும் உயிரிழப்பு

### யாழ்ப்பாணத்தில் முதியவர் ஒருவர் பலியானார்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். புத்தூர் பகுதியை சேர்ந்த 71 வயதான முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். யாழ்.போதனா வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி 06

## மத்திய, ஊவா மாகாணங்களுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்



ஜனாதிபதியினால் இலங்கை நிர்வாக சேவை தரநிலை அதிகாரிகளான அஜித் பிரேமசிங்க மத்திய மாகாண செயலாளராகவும் திருமதி தமயந்தி பரணகம ஊவா மாகாண செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பதவியிலிருக்கும் அதிகாரிகள் ஓய்வுபெற்றுச் சென்றதன் பின்னர் மேற்படி நியமனங்கள் அமுலுக்கு வருமென, ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## 2022 மே 09ஆம் திகதி சம்பவம் மேலும் மூவர் அதிரடியாக கைது

### விசாரணைகளுக்காக CIDயில் தடுத்து வைப்பு



நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி ஏற்பட்ட அமைதியின்மையின் போது, பஞ்சிகாவத்தைப் பகுதியில் பொலிஸ் வாகனத்தை சேதப்படுத்திய மற்றும் வாகனத்தின் பாகங்களுக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால், சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். 06

### விலை நிர்ணயிக்க முடியாத வகையிலான

## வலம்புரிச் சங்கு வைத்திருந்த வனவிலங்கு அதிகாரி கைது



வலம்புரிச் சங்கொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில்வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் விலங்கு தள உதவியாளர் ஒருவர் நேற்று (21) கைது செய்யப்பட்டுள்ளதாக, மீரிகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீரிகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பேபுஸ்ஸ அரச பண்ணைக்கருகில் கொடகலானலோலுவாகொட பிரதேசத்தில் வசிக்கும் 43 வயதுடைய நபரே இவ்வாறு கைது 06

## பல கோடி பெறுமதியான திமிங்கில வாந்தி சிக்கியது

### பன்னிபிட்டியவில் ஒருவர் கைது



ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட அம்பர் எனப்படும் திமிங்கில வாந்தியை வைத்திருந்த நபரொருவர் கொழும்பின் புறநகர் பகுதியான நியதகல, பன்னிபிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (20) பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இவரைக் கைது 06

## பஸ்ஸுக்குள் பெண்ணுக்கு நிகழ்ந்த கொடுமை

### தவறி விழுந்து உயிரிழந்தார்



கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த பஸ்ஸிலிருந்து தவறி விழுந்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

பஸ்ஸுக்குள் பாலியல் தொந்தரவுக்குட்படுத்தப்பட்ட 61 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு பஸ்ஸிலிருந்து விழுந்து பலியாகியுள்ளார். கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராக 06

## சர்வதேச செய்திகள்

# ஆண்டின் இறுதியில் உலகம் சாதனை வெப்பநிலையை எதிர்கொள்ள வாய்ப்பு




காலநிலை மாற்றம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட எல் நினோ வானிலை நிகழ்வு காரணமாக 2023 அல்லது 2024இல் உலகின் சராசரி வெப்பநிலையில் அதிகரிப்பு ஏற்படலாம் என்று காலநிலை விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

உலக வெப்பநிலை சற்று குறைவாக இருந்த பசிபிக் பெருங்கடலில் எல் நினோ வானிலைப் போக்கின் மூன்று ஆண்டு நிகழ்வுக்குப் பின், இந்த ஆண்டு பிற்பகுதியில் அதன் எதிர்நிலையாக உள்ள வெப்பமான எல் நினோ போக்கு மீண்டும் திரும்பவுள்ளது.

எல் நினோவின்போது, பூமத்திய ரேகையில் மேற்கு நோக்கி வீசும் காற்று மெதுவாக வீசுவதோடு சூடான நீர் கிழக்குப் பக்கம் தள்ளப்பட்டு, வெப்பமான மேற்பரப்பு பெருங்கடலின் வெப்பநிலையை அதிகரிக்கிறது.

“2022இல் ஐரோப்பாவில் வெப்பநிலை சாதனை அளவுக்கு அதிகரிப்பதற்கு எல் நினோ காரணமாக இருந்த அதேநேரம் காலநிலை மாற்றம் பாகிஸ்தானில் கடும் மழையால் பயங்கர வெள்ளத்தை உருவாக்கியதோடு ஆர்டிக் கடலில் பனிக்கட்டி அளவு சாதனை நிலைக்கு குறைந்தது.

உலகின் சராசரி உலகளாவிய வெப்பநிலை தற்போது தொழில் புரட்சிக்கு முன்னரை விடவும் 1.2 பாகை அதிகம் உள்ளது. உலகின் பிரதான கரியமில வாயு உமிழ்வு நாடுகள் அதனைக் குறைக்க உறுதி அளித்தபோதும், உலக கரியமில வாயு உமிழ்வு கடந்த ஆண்டு தொடர்ந்து அதிகரித்துள்ளது.

உலக வெப்பநிலை அதிகரிப்பு 2023இல் நடக்குமா அல்லது 2024இல் நடக்குமா என்பது இன்னும் அறியப்படாதுள்ளது. ஆனால் அது நிகழும் என்று நான் நினைக்கிறேன்” என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் கொப்பனிக்கஸ் காலநிலை மாற்ற சேவையின் பணிப்பாளர் கார்லோ பவுடெம்போ தெரிவித்துள்ளார்.

பிந்திய போரியல் கோடையில் எல் நினோ நிலைமை திரும்பும் என்று காலநிலை மாதிரிகள் கணிப்பதோடு ஆண்டு இறுதியில் வலுவான எல் நினோ ஒன்று உருவாக சாத்தியம் இருப்பதாகவும் பவுடெம்போ குறிப்பிட்டுள்ளார்.

உலகின் மிக வெப்பமான ஆண்டு 2016 ஆக பதிவானதோடு அது வலுவான எல் நினோ நிகழ்வுடன் தொடர்புபட்டுள்ளது. இந்தப் போக்கு இன்றியும் காலநிலை மாற்றம் காரணமாக கடந்த ஆண்டுகளில் கடுமையான வெப்பநிலை பதிவாகி வருகிறது.

கடந்த ஆண்டு எட்டாவது அதிக வெப்பம் கொண்ட ஆண்டாக பதிவாகி இருந்தது. பசுமையில்ல வாயு உமிழ்வுகளால் இயக்கப்படும் நீண்ட கால வெப்பமயமாதல் போக்கை பிரதிபலிப்பதாக அது இருந்தது.

இம்பீரியல் கல்லூரி லண்டனின் கிரான்தம் நிறுவகத்தின் மூத்த விரிவுரையாளர் பிரடரிக் ஒட்டோ கூறியதாவது, “கடுமையான வெப்ப அலைகள், வரட்சி மற்றும் காட்டுத்தீ உள்ளிட்ட நாடுகள் ஏற்கனவே அனுபவித்து வரும் காலநிலை மாற்ற தாக்கங்களை எல் நினோ வெப்பநிலை மேலும் மோசமாக்கலாம்” என்றார்.

# இந்தியாவில் உலக பௌத்த உச்சி மாநாடு



புது டில்லியில் கடந்த வியாழக்கிழமை (20) ஆரம்பமான உலக பௌத்த உச்சமாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கௌதம புத்தரின் உன்னத போதனைகளை குறிப்பிட்டுக் கூறினார்.

“கௌதம புத்தரின் உன்னத போதனைகள் பல நூற்றாண்டுகளாக எண்ணிலடங்காத மக்களை பாதித்துள்ளது. புத்தரின் போதனையில் கவர்ந்து உலக நலன்புரிக்காக இந்தியா புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது” என்று மோடி குறிப்பிட்டார்.

“ஒரு நபர் என்பதற்கு அப்பால் புத்தரை புரிதல் வேண்டும். புத்தர் என்பது வடிவத்திற்கு அப்பாற்பட்ட ஒரு சிந்தனை. புத்தர் என்பது உருவத்திற்கு அப்பாற்பட்ட ஓர் உணர்வு. புத்தரின் இந்த உணர்வு நித்தியமானது மற்றும் நிலையானது” என்றும் மோடி தெரிவித்தார்.

நடைமுறையை நோக்கி தத்துவம் என்ற கருப்பொருளில் சர்வதேச பௌத்த உச்சி மாநாடு புதுடெல்லியில் நடைபெற்று வருகிறது. சர்வதேச பௌத்த கூட்டமைப்புடன் இணைந்து இந்திய மத்திய அரசின் கலாசார அமைச்சகம் இந்த மாநாட்டை நடத்துகிறது.

# தோட்டத்தில் திருடியவரை அடித்து, எரித்துக் கொலை



மெக்சிகோவில் ப்ரோக்கோலியைத் திருடிய ஆடவரைக் கும்பலொன்று அடித்து, எரித்துக்கொன்றது. சுமார் 150 பேர் ஒன்றுகூடி அப்பொலோனியோ என்ற ஆடவரை பேஸ்பால் மட்டையைப் பயன்படுத்தி அடித்ததாகவும் பின்னர் அவரை எரித்துக் கொன்றதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

அந்தக் கொடூரச் சம்பவம் மெக்சிகோவின் சான் மியெல் டியென் குவிஸ்டென்கோ கிராமத்தில் நடந்ததாக தி வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்தது.

வறுமையின் காரணத்தினால் அப்பொலோனியோ தோட்டத்துக்குச் சென்று ப்ரோக்கோலியைத் திருடியதாகக் கூறப்படுகிறது. அதன் பின், பலரும் கும்பலாகச் சேர்ந்து அவரைத் துன்புறுத்திக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

“அந்தச் சம்பவத்தை எங்களால் கவனிக்காமல் விட்டுவிட முடியாது. அந்தக் கொலைக்குக் காரணமான அனைவரும் குற்றஞ் சாட்டப்படுவர்,” என உள்துறைச் செயலாளர் உறுதியளித்ததாக தி வொஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டது.

பூவெப்லா மாநிலத்தைச் சேர்ந்த தலைமை வழக்கறிஞர் ஒருவர் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார்.

# உலகின் 'இராட்சத ரொக்கெட்' நடுவானில் வெடித்துச் சிதறியது





உலகின் பெரும் செல்வந்தர் இலொன் மஸ்கிற்கு சொந்தமான ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் புதிய இராட்சத ரொக்கெட்டான ஸ்டார்ஷிப் தனது முதல் பயணத்தில் நடுவானில் வெடித்துச் சிதறியது.

அமெரிக்காவின், டெக்சாஸ் கிழக்குக் கடற்கரையில் இருந்து கடந்த வியாழக்கிழமை (20) சோதனை முயற்சியாக ஆளில்லாமல் புறப்பட்ட இந்த ரொக்கெட்டின் விபத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதுவரை உருவாக்கப்பட்ட மிகப்பெரிய ரொக்கெட்டான இது இரண்டு, மூன்று நிமிடங்கள் பறந்த நிலையில் கட்டுபாட்டை இழந்து வெடித்தது.

தனது நிறுவனம் சில மாதங்களில் மீண்டும் சோதனை முயற்சியை மேற்கொள்ளும் என்று மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

”ஸ்டார்ஷிப் இன் சோதனை ஓட்டத்தை ஓட்டி, ஸ்பேஸ்எக்ஸ் குழுவுக்கு வாழ்த்துகள். இதில் நிறைய பாடம் கற்றுக் கொண்டேன், சில மாதங்களில் அடுத்த சோதனை ஓட்டம் நடைபெறும்” என்று இலொன் மஸ்க் தனது அதிகாரபூர்வ ட்விட்டர் கணக்கில்' தெரிவித்துள்ளார்.

ஸ்டார்ஷிப் ரொக்கெட் 394 அடி (120 மிற்றர்) உயரத்துடன் 33 எஞ்சின்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் பூமியின் சுற்றுப்பாதை, நிலவு மற்றும் செவ்வாய் கிரகத்திற்கு விண்வெளி வீரர்கள் மற்றும் பொருட்களை கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனை விண்வெளிக்கு ஏப்ரல் 17 ஆம் திகதி செலுத்த திட்டமிட்டு பின்னர் பல்வேறு காரணங்களால் ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது தவணைக்கு போட்டியிட பைடன் முடிவு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நீண்ட காலம் எதிர்பார்க்கப்பட்டு வரும் இரண்டாவது தவணைக்காக போட்டியிடும் அறிவிப்பை அடுத்த மாதம் வெளியிடுவார் என்று எதிர்பார்ப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

வீடியோ பதிவு ஒன்றின் மூலம் தான் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை அவர் வெளியிடவிருப்பதாக நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி வொஷிங்டன் போஸ்ட், சி.என்.என் உட்பட அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பைடன் கடந்த முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை வெளியிட்ட ஆண்டு நிறைவு தினமான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்த அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்ப்பதாக வொஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது. எனினும் இந்தத் திட்டம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்றும் பிற்போடப்பட வாய்ப்பு இருப்பதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

80 வயதாகும் பைடன் ஏற்கனவே அமெரிக்காவின் மிக வயதான ஜனாதிபதியாக பதிவாகி இருப்பதோடு அவர் தனது இரண்டாவது தவணையை பூர்த்தி செய்யும் போது 86 வயதை எட்டி இருப்பார். தற்போது எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியின் முன்னணி வேட்பாளராக டொனால்ட் டிரம்ப் இருக்கும் நிலையில் இந்த இருவருக்கும் இடையே மீண்டும் போட்டி நிலவ வாய்ப்பு உள்ளது.

அடுத்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 2024 ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# ரஷ்ய போர் விமானம் தவறுதலாக சொந்த நகரின் மீது குண்டு வீச்சு



ரஷ்ய போர் விமானம் ஒன்று உக்ரைன் நாட்டுக்கு அருகில் இருக்கும் தனது சொந்த நகரான பெல்கொரோட் மீது தவறுதலாக குண்டு போட்டுள்ளது.

இந்த குண்டு வெடிப்பினால் நகர மத்தியில் சுமார் 20 மீற்றர் (60 அடி) அகலமான பாரிய பள்ளம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இரு பெண்கள் காயமடைந்து பல கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

எஸ்.யு–34 போர் விமானம் தவறுதலாக விமானத்தில் இருக்கும் ஆயுதத்தை விடுவித்திருப்பதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றிருப்பதாக ரஷ்ய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திகள் கூறுகின்றன.

வெடிப்பினால் குடியிருப்புக் கட்டடங்கள் சோதமடைந்திருப்பதும் கட்டடத்தின் கூரை மீது கார் வண்டி ஒன்று வீசப்பட்டிருப்பதும் வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் இருந்து வெளியான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் காண்பிக்கின்றன.

370,000 மக்கள் வசிக்கும் பெல்கொரோட் நகரம் உக்ரைன் எல்லையில் இருந்து சுமார் 40 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. அது உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரான கார்கிவ்வில் இருந்து வடக்காக உள்ளது. கடந்த ஆண்டு உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தொடக்கம் இந்த நகரில் இருக்கும் மக்கள் உக்ரைனிய ஷெல் குண்டுகளுக்கு பயந்தே வாழ்ந்து வருகின்றனர்.

உக்ரைனை நோக்கி செல்லும் ரஷ்ய போர் விமானங்கள் இந்த நகருக்கு மேலாலேயே எப்போதும் பறந்து வருகின்றன.

# சூடான் மோதலால் 20,000 பேர் சாட்டில் அடைக்கலம்



சூடானில் மோதல் நீடிக்கும் நிலையில் 20,000 பேர் வரை அண்டை நாடான சாட்டில் அடைக்கலம் பெற்றிருப்பதாகவும் அவர்கள் உணவு, நீர் மற்றும் தங்குமிடம் ஆகிய போதிய அடிப்படை வசதிகள் இன்றி இருப்பதாகவும் ஐ.நா தெரிவித்துள்ளது.

இவ்வாறு பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகம் அடைக்கலம் பெற்றிருப்பதோடு இவர்கள் தற்போது திறந்தவெளி பகுதியிலேயே தங்கி வருவதாக ஐ.நாவின் அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சில அகதிகள் சூடானில் மோதலில் சிக்கியவர்கள் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

“கடந்த சில நாட்களில் மோதல் இடம்பெறும் சூடானின் டார்புர் பிராந்தியத்தில் இருந்து அண்டை நாடான சாட்டுக்கு 10,000 தொடக்கம் 20,000 மக்கள் தப்பி வந்துள்ளனர்” என்று ஐ.நா அகதிகளுக்கான நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டார்புரின் எல்லையைன் கொண்ட கிழக்கு சாட்டில் ஏற்கனவே சூடானைச் சேர்ந்த 400,000 அகதிகள் அடைக்கலம் பெற்றுள்ளனர். இந்நிலையில் இந்த புதிய வருகையால் மேலும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சூடான் இராணுவத் தளபதி அப்தல் பத்தா அல் புர்ஹான் மற்றும் பிரதித் தலைவரான துணை இராணுவப் படையின் கட்டளைத் தளபதி முஹமது ஹம்தான் டக்லோ ஆதரவு படைகளுக்கு இடையே கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட மோதல்களில் 300க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இரு ஜெனரல்களுக்கும் இடையிலான இந்த மோதல் நோன்புப் பெருநாளை ஒட்டியும் தணியாத நிலையில் நீடித்து வருகிறது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2023 ஏப்ரல் 22 சனிக்கிழமை

**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| ளுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அரசாங்க நிறுவனங்களில் தமிழ், சிங்கள மொழிகளில் சேவைகள்

## எந்தவொரு குடிமகனும் கோர உரிமை உள்ளதென அறிவிப்பு



நாட்டிலுள்ள எந்தவொரு குடிமகனும் தமிழ் அல்லது சிங்கள மொழிகளில் அரசாங்க நிறுவனங்களிலிருந்து சேவைகளை பெற்றுக்கொள்ள முடியுமென்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் அனுராத விஜேகோன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் இரண்டும் அரசியலமைப்பில் அரச கரும மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு குடிமகன் இந்த நாட்டிலுள்ள அரசாங்க நிறுவனத்தில் சேவையைப் பெறும்போது, அவர் அல்லது அவள் தனக்கு தேவையான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தமிழ் அல்லது சிங்கள மொழிகளில் கோரலாம். அந்த உரிமை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்றும், அவர் தெரிவித்துள்ளார்.

அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் (19) நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் சிங்களம் இரண்டும் தேசிய மொழிகளாகக் கருதப்படுவதாகவும் ஒரு நாடு என்ற வகையில் அரச துறையில் மட்டுமன்றி, வேறு எந்தப் பணியிலும் சிங்களம் மற்றும் தமிழ் இரண்டும் பிரதான மொழிகளாகும் என்றும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் அரச கரும மொழிப் பாடத்தை கையாள்வதற்கான தனியான பிரிவொன்று இருப்பதாகவும் நாட்டின் அரச கரும மொழிக் கொள்கையை அரசியலமைப்பில் உள்ளடக்கி அதற்கு அதி முக்கியத்துவம் வழங்குவதற்கு அரசியலமைப்பிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# ரமழான் சிந்தனை

## அல்குர்ஆனை விளங்குவதன் அவசியம்

அல்குர்ஆன் சொற் சுருக்கமும் பொருட் செறிவும் கொண்டது. அது ஒரு ஞானப் களஞ்சியம், அறிவுத் திரட்டு, இருப்பு பற்றிய யதார்த்தம், வாழ்வின் இரகசியங்கள், மறைவான உலகுகள், பண்பாட்டுப் பொக்கிஷம், கவர்ச்சியான சட்டங்கள், ஆச்சரியமான வழிகாட்டல்கள், விசித்திரமான வித்தியாசமான உதாரணங்கள், தெளிவான சான்றுகள், பிரகாசமான ஆதாரங்கள், அதீதமான எச்சரிக்கைகள், எதிர்பாராத சுபசோபனங்கள். அல்குர்ஆனின் ஆச்சரியங்கள் முடிவடையாது. யார் அதனை வைத்து பேசுகிறாரோ அது உண்மையாய் இருக்கும். அதனை மையப்படுத்தி தீர்ப்பளிக்கிறாரோ அது நீதியானதாய் இருக்கும். அதனைக்கொண்டு செயல்பட்டால் அவருக்கு நன்மை கிடைக்கும். யார் அதன்பால் அழைப்பு விடுக்கிறாரோ அவர் சரியான பாதையை அடைந்துகொள்வார்.

மேலுள்ள விடயங்களை உணர்ந்துகொள்ள வேண்டுமானால் அல்குர்ஆனை நுணுகி ஆராய வேண்டும். மேலோட்டமான ஓதல் மூலமாகவோ வேகமான வாசிப்பின் மூலமோ அதனை அடைய முடியாது. இதனைத்தான் அல்குர்ஆனிலே ஆழ்ந்த புலமைகொண்ட இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் 'எனது ஒட்டகத்தின் கயிறு காணாமல் போனாலும் அதனை நான் அல்குர்ஆனில் கண்டுகொள்வேன்' என்றார்கள். (ஆதாரம்: தப்ஸீருரூஹுல் மஆனி, ஆலூஸி)

வசனங்களின் கருத்துக்களை நுணுக்கமாக புரிந்துகொள்ள வேண்டுமாயின் அவற்றை கருத்துணர்ந்து திரும்பத்திரும்ப ஓத வேண்டும். இது நபியவர்களும் ஸஹாபாக்களும் செய்த ஒரு வழிமுறையாகும். உதாரணமாக நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை எமக்கு தொழுவித்துக் கொண்டிருந்தபோது 'நீ அவர்களை வேதனை செய்தால்.. அவர்கள் உனது அடியார்களாக இருக்கிறார்கள். நீ அவர்களை மன்னித்தால் .. நீ யாவரையும் மிகைத்தவனாகவும் ஞானம் மிக்கவனாகவும் இருக்கிறாய்' (மாஇதா 118) என்ற வசனத்தைத் திரும்ப திரும்ப ஓதினார்கள். (ஆதாரம்: நஸாஇ, இப்னு மாஜா)

ஆகவே அல்குர்ஆனின் நோக்கத்தையும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்ற முயற்சிப்போம்.

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)




நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து நுவரெலியா ஊடாக கந்தபொல வரையான புதிய ரயில் பாதையை நிர்மாணிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன, நானுஓயா பிரதேசத்துக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார். பிரிட்டன் ஆட்சிக் காலத்திலிருந்த ரயில் பாதையைப் பயன்படுத்தி நுவரெலியா, கந்தபொல முதல் ராகலை வரையிலான ரயில் பாதையில் புதிய மின்சார ரயில் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

# நுகர்வோர் விலை சுட்டெண்படி நாட்டின் பணவீக்கம் வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான இலங்கையின் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 49.2% ஆக குறைவடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 53.6% ஆக பதிவாகியிருந்தது.

மேலும் பெப்ரவரி மாதத்தில் 49.0 சதவீதமாக இருந்த உணவு பணவீக்கம் பெப்ரவரி மாதத்தில் 42.3 சதவீதமாக குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெப்பமான காலநிலையால் மன நோய் அதிகரிக்க கூடும்



தற்போது நிலவும் வெப்பமான காலநிலையால் மன உளைச்சல் உள்ளிட்ட மன நோய்கள் அதிகரிக்க கூடுமென, மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

இதனால் மக்கள் வன்முறைக்கு ஆளாக நேரிடுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனூடாக மக்கள் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடக் கூடும் என சுட்டிக் காட்டியுள்ள மனநல மருத்துவர் ரூமி ரூபன், இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென தெரிவித்தார்.

இதற்கிடையில், மன நோய்களுக்கு மருந்து உட்கொள்பவர்களுக்கு தாகம் குறைவாக இருக்கும் என்றும் அதனால் அவர்கள் நீரிழப்புக்கு ஆளாக நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிக வெப்பமான காலநிலை காரணமாக குழந்தைகளின் சிந்திக்கும் திறன் குறைவடையக்கூடும் எனவும் இதனால் பிள்ளைகளுக்கு கல்விச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நல்லூரிலுள்ள விடுதி மீது தாக்குதல்; மூவர் கைது

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் உள்ள விடுதியொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டதுடன், அவ்விடுதியின் உரிமையாளர் மீது சாணி தண்ணீரால் ஊற்றிய குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணவன், மனைவி உட்பட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடுதிக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை (20) இரவு மூன்று பெண்கள் உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட கும்பல், கார் ஒன்றில் வந்து இறங்கியதுடன், விடுதி மீது தாக்குதல் மேற்கொண்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தால் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் கண்காணிப்பு கமெரா கட்டுப்பாட்டுத் தொகுதியை உடைத்து இவர்கள் தம்முடன் எடுத்து சென்றுள்ளதாகவும் விடுதி உரிமையாளர் தெரிவித்தார்.

06




உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குல்கள் சம்பவத்தில் பலியானவர்களின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நான்காவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் தேவாலயத்துக்கு முன்பாக நடைபெற்ற மௌன அஞ்சலியின்போது பிடிக்கப்பட்ட படம். (படம்: கயான் புஷ்பிக்க)

# மருந்துகளின் தரம் குறித்து மீளாய்வு செய்ய வேண்டும்

## GMOA தெரிவிப்பு

மருந்துகளின் தரம் குறித்து சுகாதாரத்துறையினர் மீளாய்வு செய்ய வேண்டுமென, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. தேசிய கண் வைத்தியசாலையில், சத்திர சிகிச்சை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்டபோது, அந்த சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே இதனைத் தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல், தேசிய கண் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைகளை வழமை போன்று முன்னெடுக்க முடியும் என்றும், அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் குறித்து ஜனாதிபதி ஆராய வேண்டும்

## முன்னாள் எம்.பி. சதாசிவம் கோரிக்கை



பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து பார்க்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் கோரியுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி நுவரெலியா சென்றிருந்த போது, இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு கிடைக்கும் ஆயிரம் ரூபா வேதனம், அவர்களின் நாளாந்த வாழ்க்கைச் செலவுக்குக்கூட போதுமானதாக இல்லை.

இதனால், அதிகளவானோர் வேறு தொழில்களுக்கு செல்கின்றனர்.

எனவே, தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதுடன், செய்யப்படும் வேலையின் அளவும் குறைவடைந்துள்ளது.

இது பெருந்தோட்டங்களின் எதிர்காலத்தை பாதிக்கக்கூடும் என்பதால் ஜனாதிபதி இது தொடர்பில், உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் சதாசிவம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கையிலிருந்து சிசுக்கள் வெளிநாடுகளுக்கு கடத்தல்

## இன்டர்போல் அதிர்ச்சித் தகவல்

இலங்கையிலிருந்து 11,000க்கும் மேற்பட்ட சிசுக்கள் ஐரோப்பாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக, இன்டர்போல் பொலிஸார் அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக் குழந்தைகளை விற்பனை மோசடியை நடத்தி வந்த மலேசிய தம்பதியரை அந்நாட்டு குடிவரவு அதிகாரிகள் கைது செய்ததை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இது தெரியவந்துள்ளது.

60 முதல் 80 டொலர்களுக்கு இந்தக் குழந்தைகள் விற்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மலேசிய கடவுச்சீட்டைக் கொண்ட இலங்கைக் குழந்தைகள் 6,000 முதல் 8,000 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, 4,000 இலங்கை சிசுக்கள் நெதர்லாந்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக, இன்டர்போல் தகவல் தெரிவித்துள்ளது. இந்த தகவலை நியூயார்க் டைம்ஸ் நாளிதழும் வெளியிட்டுள்ளது.

அதன்படி கடத்தலில் ஈடுபட்ட தம்பதிகள் இலங்கைக் குழந்தைகளுக்கான மலேசிய கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுக்கச் சென்ற போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

# அமைச்சு ஒன்றின் அதிகாரி எனக்கூறி ஆள்மாறாட்டம் செய்த நபர் ஒருவர் CID யினரால் கைது



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக ஆள்மாறாட்டம் செய்த நபர் ஒருவர், சிலாபத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி அமைச்சு அதிகாரி ஒருவரை தொலைபேசியில் அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து

06

# இன்னும் இரண்டு வாரங்களில் முட்டை விலை குறைவடையும்

## வர்த்தக அமைச்சர் நளின் தெரிவிப்பு

இன்றும் இரண்டு வாரங்களில் முட்டைகளின் விலைகளை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன்படி, கட்டுப்பாட்டு விலையை மீறி முட்டையை விற்பனை செய்வோருக்கு இடமளிக்க போவதில்லை எனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு முட்டைகள் விற்பனை செய்யப்படுமாயின் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளின்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 209.43 | 222.33 |
| கனடியன் டொலர் | 230.71 | 244.89 |
| யூரோ | 342.62 | 361.67 |
| ஜப்பான் யென் | 2.3310 | 2.4603 |
| சிங்கப்பூர் டொலர் | 233.89 | 247.64 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.39 | 409.83 |
| சுவிஸ் பிராங்க் | 348.19 | 370.28 |
| அமெரிக்க டொலர் | 313.05 | 328.51 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 851.76 | கட்டார் ரியால் | 87.88 |
| குவைத் டினார் | 1,048.09 | சவூதி ரியால் | 85.62 |
| ஓமான் ரியால் | 834.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.44 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்

தனியாக நின்று பலரின் பகையைத் தேடிக் கொள்பவனை ஆணவம் பிடித்தவன் என்பதைவிட அறிவிலி என்பதே பொருத்தமாகும்.

## நாட்டை கட்டியெழுப்பும் பயணத்தில் ஈகைத்திருநாள் பங்களிக்கட்டும்!

இஸ்லாமிய வருடக்கணிப்பில் ஒன்பதாவது மாதமாக விளங்கும் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்ட முஸ்லிம்கள் இப்போது ஈதுல் பித்ர் ஈகைத் திருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். பெருநாள் தினத்தின் காலையில் மேற்கொள்ளும் பெருநாள் தொழுகையோடு இத்திருநாள் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய மார்க்கத்தின் பிரதான கடமைகளில் ஒன்றாக ரமழான் மாத நோன்பு விளங்குகிறது. அதே நேரம் புனித அல் குர்ஆன் அருளப்பட்ட மாதமாகவும் ரமழான் மாதம் உள்ளது. அதனால் வருடா வருடம் இம்மாதம் முழுவதும் முஸ்லிம்கள் நோன்பு இறைவணக்கங்களில் ஈடுபட்டு ஈகைத் திருநாளைக் கொண்டாடுவது வழமையாகும்.

இம்மாதத்தில் தினமும் உணவையும் பானங்களையும் உடல் இச்சைகளையும் குறிப்பிட்ட நேரகாலம் தவிர்த்து இருந்து நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபடுவதன் ஊடாக உடல், உள ரீதியில் பல பயிற்சிகளையும் பிரதிபலன்களையும் முஸ்லிம்கள் பெற்றுக் கொள்கின்றனர். அவற்றில் ஆரோக்கிய ரீதியிலான பிரதிபலன்களும் குறிப்பிட்டத்தக்கவை.

நோன்பு நோற்பதன் மூலம் ஏழை, எளிய மக்களின் பசி உள்ளிட்ட வறுமையை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பை வசதி படைத்தவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். அத்தோடு நோன்பின் ஊடாக சகிப்புத்தன்மை, பொறுமை, மனிதாபிமானம் போன்ற உணர்வுகள் நோன்பிருப்பவர்களில் மேலோங்குகிறது. அது தேவையுள்ளவர்களையும் வறுமைக்கு உள்ளாகியுள்ளவர்களையும் கருணைக்கண் கொண்டு நோக்கி உதவும் மனப்பான்மையின் மேம்பாட்டுக்கு வித்திடுகிறது. அத்தோடு ஆன்மீக ரீதியிலான பக்குவத்தையும் நோன்பின் மூலம் அடைந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு ஆன்மீக ரீதியாகவும் லௌஹீக ரீதியாகவும் பல்வேறு நன்மைகளையும் பிரதிபலன்களையும் அடைந்து கொள்ள வித்திட்டுள்ள நோன்பு கடமையை நிறைவேற்றி முஸ்லிம்கள் இத்திருநாளைக் கொண்டாடுகின்றனர். இத்தினத்தில் சமூகத்தில் இருக்கும் ஏழைகள், வறியவர்களும் சந்தோஷமாகப் பெருநாளைக் கொண்டாடிடவும் உதவுகின்றனர்.

தங்களுக்கு இடையிலான உறவுமுறைகளையும் சகோதரத்துவ உணர்வுகளையும் வலுப்படுத்தி மேம்படுத்திக் கொள்ளவும் இத்திருநாள் வழிவகுத்திருக்கிறது. அத்தோடு ஏனைய சமூகத்தினருடனும் நட்புறவையும் சகவாழ்வையும் மேலும் மேம்படுத்திக் கொள்ளவும் துணைபுரியக்கூடியதாக உள்ளது ஈகைத்திருநாள்.

இவ்வாறு சிறப்புற்று விளங்கும் ரமழானையும் ஈகைத் திருநாளையும் 2019 ஆம் ஆண்டின் பின்னர் அச்சம் பீதியில்லாத நிலையில் இலங்கை முஸ்லிம்கள் மாத்திரமல்லமாமல் உலகளாவிய முஸ்லிம்களும் இம்முறைதான் அடைந்து கொண்டுள்ளனர். அதனால் இத்திருநாளை சிறப்பாகக் கொண்டாடுவதில் முஸ்லிம்கள் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தோற்றம் பெற்ற கொவிட் 19 பெருந்தொற்று அச்சுறுத்தல் முஸ்லிம்கள் கட்டுப்பாடுகளுடனும் வரையறைகளோடும் பெருநாட்களைக் கொண்டாடும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். முழு உலகமும் இயல்புநிலையை இழந்திருந்தது.

தற்போது அந்த அச்சுறுத்தல் நிலை பெரும்பாலும் நீங்கியுள்ள சூழலில் இவ்வருடம் இப்பெருநாளைக் கொண்டாடும் வாய்ப்பை முஸ்லிம்கள் பெற்றுள்ளனர்.

இலங்கை முஸ்லிம்களும் கடந்த நான்கு வருடங்களுக்குப் பின்னர்தான் இப்பெருநாளை சிறப்பாக கொண்டாடும் சூழலை அடைந்து கொண்டுள்ளனர். அதுவும் கடந்த வருட முற்பகுதியில் நாடு எதிர் கொண்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுக் கொண்டிருக்கும் சூழலாக இருந்து கொண்டிருக்கிறது.

இதேவேளை இந்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் இம்முறை நோன்பு பெருநாளை அடைந்திருக்கும் காலசூழல் இந்நாட்டில் வாழும் எல்லா இன, மத மக்களதும் பண்டிகைகளைக் கொண்டுள்ள மாதமாக விளங்குகின்றது. அதாவது கிறிஸ்தவ மக்களின் உயிர்த்த ஞாயிறு பண்டிகை, சிங்கள தமிழ் புத்தாண்டு என்பன ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. தற்போது நோன்பு பெருநாள் வந்தடைந்திருக்கிறது. இம்முறை இந்நாட்டில் வாழும் எல்லா இன, மத மக்களது பண்டிகைகளும் ஒரே மாதத்தில் வந்திருப்பதன் ஊடாக பாரிய செய்தி முழு நாட்டுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது அனைத்து மக்களும் ஒரு தாயின் பிள்ளைகள் போன்று வாழ வேண்டியதன் அவசியமே அந்தச் செய்தியாகும்.

அப்போதுதான் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து மீட்சி பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் நாட்டை விரைவாகவும் வேகமாகவும் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். அதற்காக அனைத்து மக்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். இலங்கையர் என்ற அடையாளத்துடன் முன்னேற்றப்பாதையில் பயணிக்க வேண்டும். அப்போதுதான் வளமானதும் சுபீட்சமானதுமான தேசமாக இந்நாடு மிளிரகூடிய காலம் விரைவில் உதயமாகும். அதுவே அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாக உள்ளது. அதனால் பேதங்களுக்கு அப்பாலான ஒற்றுமையும் ஐக்கியமும் புரிந்துணர்வும் மிகவும் முக்கியம். அதுவே யதார்த்தம்.

ஆகவே ரமழான் பண்டிகையைக் கொண்டாடும் முஸ்லிம்கள் மாத்திரமன்றி ஏனைய மக்களும் இந்த யதார்த்தத்தை உணர்ந்து நாட்டையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்காக தம்மாலான பங்களிப்பை அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# இனங்களிடையே நல்லுறவை வலுவூட்ட புனித நோன்பு பெருநாள் வழிவகுக்கட்டும்!



இறைஅருளையும் பாவவிமோசனத்தையும் அடைய ரமழான் எனும் விஷேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி வைத்து கவலையில் ஆழ்ந்த இறைவிசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்புமிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.

புனித ரமழான் மாதத்தில் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள், ஷவ்வால் மாத தலைப் பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகின்றனர்.

ரமழானில் நன்மைகளைக் கொள்ளையிட்ட உள்ளங்கள் ஷவ்வால் மாத தலைப்பிறையுடன் ரமழானுக்கு விடை கொடுத்து விட்டு நோன்புப் பெருநாள் குதூகலத்தில் திளைக்கின்றன.

பெருநாள் தினம் என்பது சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரன், முதியவர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியுடன் கழிக்கக் கூடிய தினமாகும்.

பெருநாள் தினம் அல்லாஹ்வை ஞாபக மூட்டக் கூடிய, அவனைப் புகழக் கூடிய தினமாக இருக்க வேண்டுமே தவிர நற்செயல்களுக்கு மூட்டை கட்டும் தினமாக அமையலாகாது.

ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மைகளை செய்ய நாம் முன்வர வேண்டும். நாம் மட்டும் பெருநாளைக் கொண்டாட, அயல்வீட்டார் பெருநாளைக் கொண்டாட வசதியற்றவனாக இருப்பானேயானால் நாம் கொண்டாடும் பெருநாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.


வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றக் கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணக்கூடியதாக உள்ளது. பெருநாள் தினத்தில் முஸ்லிம்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதே போன்று அன்றைய தினத்தில் முஸ்லிம்கள் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உள்ளன.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்கள் தமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு முஸ்லிம்கள் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இனநல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் தொழில் நடவடிக்கைகளும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்கள் பெரும்பான்மையினருடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும் சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும் புரிந்துணர்வும் ஏற்படவும் அல்லாஹ் அருள் புரிவானாக!



கலாபூஷணம் பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்

# தமிழ், சிங்கள பக்தர்கள் ஐக்கியத்துடன் வழிபடுகின்ற சோழர்காலத்து ஆலயம்

சோழர்காலத்தில் நிருமாணிக்கப்பட்டதாகக் நம்பப்படும் பிள்ளையார் ஆலயம் ஒன்று கதிர்காமத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கதிர்காமம் திஸ்ஸ பகுதியில் 'தஞ்சை நகரம்' என்று அழைக்கப்பட்ட இடத்தில் இந்த ஆலயம் பாழடைந்த நிலையில் காணப்பட்டது. கூரைகள் சிதைந்த நிலையில் இருந்தன. மூலவிக்கிரகம் அகற்றப்பட்டு வெறும் பீடம் மட்டுமே காணப்பட்டது.

அங்கு 'சித்தர்கள் குரல்' அமைப்பினர் அதன் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் சில தினங்களுக்கு முன்னர் அங்கு விஜயம் செய்தனர்.

பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன் இவ்வாலய நிலையை நேரில் அறிந்து திருமலை பிரபல ஆசிரியர் பிரகாஷ் மூலமாக 'சித்தர்கள் குரல்' அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியிடம் தெரிவிக்கப்பட்டது.

அகில உலக மகாசித்தர்கள் அறக்கட்டளை சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான ஆலோசகரான வாரணாசி பெலாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் சித்தவித்யாகீர்த்தி வேதிக்பண்டிற் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர் குருஜி தலைமையில் சித்தர்கள் குரல்அமைப்பினர் அங்கு விஜயம் செய்து ஆலயத்தை பார்வையிட்டு ஆலயத்துக்குப் பொறுப்பான விஸ்வநாதன் மற்றும் பராமரிப்பாளர் சிவகுமார் குடும்பத்துடன் கலந்துரையாடினர். அதன்போது ஆலயத்தை புனரமைத்து தருமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அதனையடுத்து சித்தர்கள் அங்கு இரு மணிநேர சிறப்பு யாகத்தை நடத்தினர். அதன்போது சூழவுள்ள தமிழ், சிங்கள மக்களும் இணைந்து கொண்டனர்.

யாகத்தை சித்தர்கள் அமைப்பின் தலைவர் சிவசங்கர் ஜி நடத்த சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உபதலைவர் மனோகரன், நமசிவாய மகேஸ்வரன் சுவாமி, ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா, தியாகராஜா, சிங்கப்பூர் டொக்டர் பி.மகேஸ்வரன், வீரமுனை கஸ்தூரன், மற்றும் கிஷோர் ஆகியோர் பங்கேற்றனர்.

ஆலயத்தை புனரமைத்து உரியவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்படுமென சிவசங்கர் ஜி அங்கு தெரிவித்தார்.

## புனரமைப்பதற்கு 'சித்தர்கள் குரல்' அமைப்பு தீர்மானம்





அங்கு ஆலய தலைவர் விஸ்வநாதன் கூறுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

கதிர்காமத்திலிருந்து அம்பாந்தோட்ட செல்லும் பிரதான வீதியில் அமைந்த திஸ் சமஹாராமவில் அமைந்த புராதனமான சைவத்தமிழ்க் கிராமம் 'தஞ்சை நகரம்' என்று தொன்றுதொட்டு அழைக்கப்பட்டு வருகிறது.

அங்கு மன்னராட்சிக் காலத்தில் பெருநகராக விளங்கிய இக்கிராமம் இன்றும் 'தஞ்சை நகரம்' என்றே அழைக்கப்படுகிறது. தஞ்சை நகரத்தில், பிரதான வீதியை மிக அண்மித்து, பிரதான வீதியை நோக்கியவாறு அமைந்திருப்பதுதான், யாத்திரிகர்களுக்கும் தன்னை நாடுவோருக்கும் ஞானம் வழங்கும் 'குளவிப் பிள்ளையார்' ஆலயம்.

கதிர்காமம் யாத்திரிகர்கள் இந்த ஆலயத்தைக் கடந்து செல்லும்போது இப்பிள்ளையாரின் அனுமதியைப் பெற்றே செல்ல வேண்டும் என்ற மரபு காலங்காலமாகப் போற்றப்பட்டு வருகிறது.

யாத்திரைக்குத் தகுதி அற்றவர்களைப் பிள்ளையார் குளவி வடிவில் தண்டிப்பார் என்றும் அதனாலேயே 'குளவிப் பிள்ளையார்' என்ற பெயர் புராதன காலத்திலிருந்து வழங்கப்பெற்று வருகிறது என்றும் கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் சித்தர்களாலும் ஞானிகளாலும் பூசிக்கப் பெற்ற புனிதம் மிக்க இவ்வாலயமும் இது அமைந்த நிலமும் ஆங்கிலேய இராச்சியத்தின் இராணிக்கு உரியதாகின. இந்த நிலையில், இவ்வாலயத்தின் அருளைப் பெற்று உயர்ந்த மகான் மதனகுருசாமி என்பவர் 1903 இல் ராணியிடமிருந்து கோயிலையும் நிலத்தையும் பெரும் முயற்சி செய்து பெற்றார்.

இந்தியாவிலிருந்து ஐந்தரை அடி உயரமான அழகிய ஒரு பிள்ளையார் சிலையைக் கொண்டு வந்து 1929இல் அதைத் ஸ்தாபித்து அழகிய கட்டடக்கலையுடன் கூடிய ஆலயமாக்கினார்.

மதனகுருசாமியின் மறைவுக்குப் பின்னர் அவரது மனைவியும் முருக பக்தையுமான பழநி அம்மா இந்த ஆலயத்தைப் பேணிவந்தார். நாட்டில் 83 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் இக்கோயில் பாதிப்புக்குள்ளாகி அழிவடையும் நிலைக்குச் சென்றது. 'கிராமோதயம் 87' கொண்டாட்டங்களை முன்னெடுத்த அப்போதைய பிரதமர் ஆர். பிரேமதாசா அவர்களின் பணிப்புரையின் பேரில் 23.06.1987 அன்று இந்த ஆலயம் மீளவும் திருத்தியமைக்கப் பெற்றது.

ஆர். பிரேமதாசா அவர்களால் புனரமைக்கப்பெற்ற ஆலயத்தின் முக்கியத்துவத்தை அப்போது நிறுவப்பெற்ற கல்வெட்டு சிறப்புறக் காட்டுகிறது. நாட்டில் இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 2007 இல் இந்த ஆலயம் மீளவும் பாதிப்புக்குள்ளானது. இங்கிருந்த ஐந்தரை அடி உயரமான மூலமூர்த்தி காணாமற் போய்விட்டது.

தடயமற்று அழியும் தறுவாயில் உள்ள இந்த ஆலயத்தில் சிறிய பிள்ளையாரை



வைத்து இப்போது வழிபடுகின்றனர். மதனகுருவின் பெறாமகனாகிய கந்தையா விஸ்வநாதன் ஆகிய நானும் மனைவியும் இந்த ஆலயத்தைப் பராமரித்து வருகின்றோம்.

இந்த ஆலயத்தைச் சூழவும் சுமார் 50 சைவத் தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. சிங்கள மக்களும் இந்த ஆலத்திற்கு வந்து செல்கின்றனர். சூழ உள்ள சைவத் தமிழ்க் குடும்பங்கள் வறிய நிலையில் உள்ளன. ஆனால் அங்குள்ள எல்லோருக்கும் ஆலயத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற பெருவிருப்பு உள்ளது. இந்த ஆலயம் திருத்தி மீளமைக்கப்பெற்றால் அவ்வாலயச் சூழலில் உள்ள சைவத் தமிழர்களுக்கும் பாத யாத்திரிகருக்கும் சிங்கள பக்தர்களுக்கும் பெரும் துணையாக இருக்கும்.

இந்த சுற்றுச்சூழலிலே தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்து வருகின்றார்கள். ஆரம்பத்தில் தஞ்சை நகரம் என்றிருந்த இந்த பிரதேசம் இன்று 'சுதுகம்பல' என அழைக்கப்படுகின்றது. தூர்ந்து கிடக்கும் இந்த ஆலயத்தை புனரமைத்து தருமாறு வேண்டுகிறேன்" என்றார். மிக விரைவில் ஆலயத்தை புனரமைத்து மக்கள் வழிபாட்டிற்காக திறந்துவைப்பதாக சங்கர் ஜி அங்கு தெரிவித்தார்.

வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு குறூப் நிருபர்)

# சௌபாக்யா உற்பத்தி கிராம செயற்றிட்டம்

சௌபாக்யா உற்பத்தி கிராம செயற்றிட்டம் சமுர்த்தி, வீட்டு பொருளாதார நிதி மற்றும் சுயதொழில் இராஜாங்க அமைச்சினால் உள்நாட்டு உற்பத்தி திட்டத்தை விருத்தி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டமாகும்.

சமுர்த்தி பயனாளிகள் உட்பட குறைந்த வருமானமுடைய பயனாளிகள் மற்றும் உற்பத்தியில் மிகவும் நேரடியாக. பங்களிப்பு செய்யக்கூடிய 1000 குடும்பங்களை நாடளாவிய ரீதியில் தெரிவு செய்து அதில் முதல் கட்டத்தில் 500 மற்றும் 2 ஆம் கட்டத்தில் 500 குடும்பங்களையும் இணைப்பதே இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் சமூகத்தின் வருமான நிலையினையும் கிராமிய பொருளாதாரத்தையும் விருத்தி செய்து உள்நாட்டு உற்பத்தித் திட்டத்தை மேலும் விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் ஐந்து திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. (01) விவசாயம், (02) கால்நடை வளர்ப்பு, (03) மீன்பிடி தொழில், (04) கைத் தொழில், (05) சேவை சுற்றுலா தொர்பிலான தொழில் என்பனவாகும்.

அரசாங்கத்தின் பங்களிப்புடன் ஒரு கிராமத்திற்கு 10 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படும். அதற்கு மேலதிகமாக சகல உற்பத்தி கிராமங்களிதும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக 3 மில்லியன் ரூபா நிதி மாவட்ட செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்படும்.





பயனாளிகளின் உற்பத்தி உள்ளீடுகளில் அரசாங்கத்தின் பங்களிப்பைவிட சமமாக அல்லது அதிகமான பங்களிப்பு வழங்கப்பட வேண்டும். அந்த பங்களிப்பு உபகரணம், கட்டுமானம், உழைப்பு அல்லது பணமாக இருக்கலாம்.இதன் கருப்பொருளின் கீழ் தாய்லாந்து அரசாங்கத்தால் நடத்தப்படும் உள்நாட்டு தொழில்முனைவோர் ஊக்கத்திறன் கண்காட்சி தொழில்நுட்ப உதவியை பெற்றுக்கொள்ள அந்நாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஒரு உற்பத்திக் கிராமம் தாய்லாந்தின் முழு மாவட்டங்களிலும் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் உதவி இவ்வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.அந்த வேலைத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு உற்பத்திகளின் தரமான பன்முகத்தன்மை மற்றும் விநியோகத்திறனை விருத்தி செய்தல் கிராமிய மக்களை ஊக்குவிக்கும் போது அங்கு சகல கிராமங்களிலும் ஒரு உயர்தர உற்பத்தி தெரிவு செய்யப்படும்.

மதார் தம்பி ஆரிப்
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# இந்தியா எங்கும் வெப்பஅலை தாக்கம் அதிகரிப்பு; ஆபத்து மண்டலமாக நாட்டின் 90 வீத பிரதேசங்கள்!

**இலங்கையைப் போன்று இந்தியாவிலும் தற்போது அதிக வெப்பமான காலநிலை நிலவுகின்றது. பருவநிலை மாற்றத்தினால் இந்தியாவில் வெப்பஅலைகளின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.**

இந்தியாவின் மொத்த பரப்பளவில் 90 சதவீதத்திற்கும் அதிகமான பகுதிகள் அதிக எச்சரிக்கையான அல்லது ஆபத்து மண்டலத்தில் வெப்ப அலைகளால் தாக்கப்படுவதாக சமீபத்திய ஆய்வு ஒன்று எச்சரிக்கிறது. இந்த வெப்ப அலைகள் தொழிலாளர்களுக்கு மனஅழுத்தத்தை ஏற்படுத்துவதாகவும், அதனால் நாட்டின் தனிநபர் வருமானம் குறையக்கூடும் எனவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்னி நட்சத்திர காலம் பற்றி மக்கள் அச்சப்பட்டு வந்த நிலையில், வெப்ப அலைகள் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. கடலில் அலைகள் எழுவதை பார்த்திருப்போம். அது என்ன வெப்பஅலை என்ற சந்தேகம் பலருக்கும் எழக்கூடும்

கோடை காலத்தில் சராசரியாக பதிவாகும் வெப்பநிலையை விட வழக்கத்திற்கு மாறாக அதிக அளவில் வெப்பம் பதிவாகும். இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் நீடிக்கும்.

தொடர்ச்சியாக 45 பாகை செல்சியசுக்கு அதிகமாக வெப்பநிலை பதிவானாலும் வெப்பஅலை வீசுவதாக வானிலை மையம் எச்சரிக்கும். இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாகவே வெப்பஅலைகள் பதிவாகி உயிர்களை பறித்து வருகின்றன. இந்தியாவில், சுமார் 75% தொழிலாளர்கள் (சுமார் 380 மில்லியன் மக்கள்) வெப்பம் தொடர்பான மனஅழுத்தத்தை அனுபவிக்கின்றனர், இது தொடர்ந்தால், 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5% 4.5% ஐ இழக்க நேரிடும் என்று மெக்கின்சி குளோபல் இன்ஸ்டிடியூட் அறிக்கை எச்சரித்துள்ளது.

## தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்தியாவின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு!

ரமித் தேப்நாத் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் சகாக்களால் நடத்தப்பட்ட ஆய்வில், காலநிலை மாற்றத்திற்கான அதன் சமீபத்திய மாநில செயல் திட்டம் இந்த உண்மையைப் பிரதிபலிக்கத் தவறிய போதிலும், டெல்லி குறிப்பாக கடுமையான வெப்பஅலை தாக்கங்களுக்கு ஆளாகக்கூடியது என்பதையும் வெளிப்படுத்தியது.

இந்தியா இப்போது பல, ஒட்டு மொத்த காலநிலை அபாயங்களின் மோதலை எதிர்கொள்கிறது.

ஆய்வின்படி, டெல்லியில் வெப்பம் தொடர்பான பாதிப்புகளை அடித்தட்டு மக்கள் எதிர்கொள்கின்றனர். அதிக மக்கள் தொகை, மின்சாரம், தண்ணீர் மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமை, உடனடி சுகாதாரம் மற்றும் சுகாதாரம் கிடைக்காதது ஆகியவை பாதிப்பை மோசமாக்குகின்றன.





வெப்ப அலைகளின் தாக்கத்தை இந்தியா உடனடியாக எதிர்கொள்ளத் தவறினால், நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் இந்தியா மெதுவாக முன்னேறக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்கான இந்தியாவின் முன்னேற்றத்தை வெப்பஅலைகள் முன்பு நினைத்ததை விட குறிப்பிடத்தக்க அளவில் தடுக்கின்றன என்றும், தற்போதைய மதிப்பீட்டு அளவீடுகள் நாட்டில் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய வெப்பஅலைகளின் தாக்கங்களை முழுமையாகப் பிடிக்காமல் போகலாம் என்றும் ஆய்வு பரிந்துரைத்தது.

இந்தியாவில் வெப்ப அலைகள் 1992 முதல் 24,000 க்கும் மேற்பட்ட இறப்புகளை ஏற்படுத்தியுள்ளன மற்றும் வட இந்தியாவில் காற்று மாசுபாடு மற்றும் பனிப்பாறை உருகுவது அதிகரித்துள்ளன. சமீபத்தில், மகாராஷ்டிராவில் ஒரு விருது வழங்கும் விழாவின் போது வெயிலில் சிக்கி பதினான்கு பேர் இறந்தனர். இந்தியாவில் அதிகபட்ச வெப்பநிலை சமவெளிகளில் குறைந்தபட்சம் 40 பாகை செல்சியஸ் ஆகவும், கடலோரப் பகுதிகளில் குறைந்தபட்சம் 37 பாகை செல்சியஸ் ஆகவும், மலைப்பாங்கான பகுதிகளில் குறைந்தபட்சம் 30 பாகை செல்சியஸ் ஆகவும் இருக்கும் போது வெப்பஅலைக்கான வரம்பு எட்டப்படும்.



இந்த மாத தொடக்கத்தில், இந்திய வானிலை ஆய்வு மையம், வடமேற்கு மற்றும் தீபகற்பப் பகுதிகளைத் தவிர, ஏப்ரல் முதல் ஜூன் வரை நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பை விட அதிகபட்ச வெப்பநிலையை கணித்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் மத்திய, கிழக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் வழக்கமான வெப்பஅலை நாட்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

# சிங்கப்பூர் செய்மதியை சுமந்தவாறு இன்று விண்ணுக்குத் தாவுகிறது இந்திய ரொக்கட்!

**இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சிங்கப்பூரின் புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான TeLEOS–02 ஐ துருவ செயற்கைக்கோள் ஏவுகணை வாகனத்தில் சுமந்து செல்லும் மற்றொரு வணிகரீதியான ஏவலுக்கு தயாராகியுள்ளது. இன்று சனிக்கிழமை அந்த செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுகின்றது.**



இன்று 22 ஆம் திகதி பிற்பகல் 2.19 மணிக்கு நாட்டின் ஒரேயொரு விண்வெளித்தளமான ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதல் ஏவுதளத்தில் இருந்து இந்த செய்மதி ஏவப்படும்.

இந்த செயற்கைக்கோள் TeLEOS 2750 கிலோ எடையுள்ள பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளாக இருக்கும். இது செயற்கை துளை ரேடார் மூலம் 1 மீட்டர் தெளிவுத் திறனில் தரவை வழங்கும் திறன் கொண்டது. இந்த செயற்கைக் கோள்கள் கடந்த பெப்ரவரி மாதம் இந்தியாவுக்கு வந்தன.

இஸ்ரோவின் இந்த ஆண்டின் மூன்றாவது ஏவுதல் இதுவாகும். இவை மூன்றுமே வெவ்வேறு ஏவுகணை வாகனங்களைப் பயன்படுத்துகின்றன. புதிய சிறிய செயற்

## அமெரிக்கா மற்றும் சீனாவை முறியடிக்கும் விதத்தில் வணிகரீதியில் விண்வெளித்துறையில் இந்தியா சாதனை!

கைக்கோள் ஏவுகணை வாகனம் (SSLV) மூன்று செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக நிலைநிறுத்தி, விண்வெளி நிறுவனத்தால் செயல்படுவதாக அறிவிக்கப்பட்டபோது முதல் ஏவுதல் பெப்ரவரியில் நடந்தது. இந்தியாவின் கனமான LVM3 ஆனது 36 OneWeb செயற்கைக்கோள்களை முற்றிலும் வணிக நோக்கில் செலுத்திய போது இரண்டாவது ஏவுதல் மார்ச் மாதம் நடைபெற்றது.

மற்றொரு வணிகப் பணி நடைபெற்று வருவதால், வணிகச் சந்தையில் இந்தியாவின் பங்கை அதிகரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை விண்வெளி நிறுவனம் வலுப்படுத்துகிறது. இது தற்போதைய 2 சதவீதத்தில் இருந்து அதிகரிக்கிறது.

1993 முதல் நூற்றுக்கணக்கான செயற்கைக்கோள்களை ஏவியது மற்றும் மூன்று தோல்விகள் அல்லது பகுதியளவு தோல்விகளை மட்டுமே பெற்றுள்ள இஸ்ரோவின் நம்பகமான வாகனங்களில் ஒன்றாக நிரூபிக்கப்பட்ட பி.எஸ்.எல்வியின் 57 ஆவது ஏவுகணை இதுவாகும். இந்த ஏவுகணை இந்தியாவின் பிக்டிக்கெட் பயணங்களான சந்திரயான் போன்றவற்றிலும் சென்றுள்ளது.



சிங்கப்பூர் செயற்கைக்கோள் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆகும். இது எல்லா நேரங்களிலும் மற்றும் எல்லா வானிலையிலும் பூமியின் படங்களை எடுக்க உருவாக்கப்பட்டது.

ST என்ஜினியரிங் கட்டமைக்கப்பட்ட, 750கிலோகிராம் செயற்கைக்கோள், ஹாட்ஸ்பாட் மற்றும் மூடுபனி கண்காணிப்பு, விமான விபத்து தேடல் மற்றும் மீட்பு மற்றும் பலவற்றை உள்ளடக்கியது. ஆனால் அவை மட்டும் அல்லாமல், பரந்த அளவிலான சாத்தியமான பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.

PSLV திரவ எரிபொருள் நிலைகளைப் பயன்படுத்தும் முதல் இந்திய ரொக்கெட் இதுவாகும்; இது இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட மூன்றாம் தலைமுறை வாகனமாகும். இந்த ரொக்கெட்டைப் பயன்படுத்தி பல செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளன.

புவி கண்காணிப்பு செயற்கைக் கோள் (EOS06) மற்றும் 321 மெட்ரிக் தொன் எடையுள்ள எட்டு நானோ செயற்கைக்கோள்கள் பி.எஸ்.எல்.வி அதன் மிக சமீபத்திய பயணத்தில் சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டன.

இன்று 22 ஆம் திகதி, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி சி55 விண்கலம் விண்ணில் ஏவப்படும். சிங்கப்பூர் விண்கலத்தை ஏற்றிச் செல்லும் ரொக்கெட் சுற்றுப்பாதையில் பிற்பகல் 2:19 மணிக்கு ஏவப்பட உள்ளது.

இந்தியாவில் இருந்து ஏவப்படும் சிங்கப்பூரின் முதல் செயற்கைக் கோள் இதுவல்ல. ஜூன் 2022 இல், PSLVC53 பணியானது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் உதவியுடன் மூன்று சிங்கப்பூர் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது. DSEO செயற்கைக் கோள், 155 கிலோ எடையுள்ள NeuSAR செயற்கைக்கோள் மற்றும் சிங்கப்பூர் ஆராய்ச்சி பல்கலைக்கழகமான ஸ்கூப்1 ஆகியவை ஏவுகணையில் இருந்தன.




DSEO செயற்கைக்கோளானது எலக்ட்ரோஆப்டிகல், மல்டிஸ்பெக்ட்ரல் பேலோட் மூலம் 0.5 மீ தீர்மானம் கொண்ட படங்களை எடுக்கக்கூடியதாக இருந்தது.

சிங்கப்பூர் ஆய்வு என்பது பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆகும். இது 24 மணிநேரமும், அனைத்து வானிலை செயற்கைக் கோள் படங்களையும் படம்பிடிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

விண்வெளித் துறையில் ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்கா, ரஷ்யா, சீனாவுக்கு இணையாக இந்தியாவும் வளர்ச்சி அடைந்து வருகிறது. அதிவிரைவான இணை

## பிரதமர் நரேந்திர மோடியின் 'மேக் இன் இந்தியா' திட்டம் வெற்றிப்பாதையில்!

யதள சேவையை வழங்குவதற்காக, செயற்கைக்கோள்களை விண்வெளியில் செலுத்தி சுற்று வட்டப்பாதையில் நிறுத்தும் வர்த்தகம் செழிப்படைந்து வருகிறது.

செயற்கைக்கோள்களை ஏவுவதில் முக்கிய பங்காற்றி வந்த நாடுகளாக ரஷ்யா மற்றும் சீனா இருந்து வந்தது. எனினும், உக்ரைன் போர் மற்றும் அமெரிக்காவுடனான சீனாவின் பதற்ற சூழல் ஆகியவற்றால் புதுப்புது வாடிக்கையாளர்களை நோக்கி செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தற்போது இந்தியா இதில் பெரும் சாதனை படைத்து வருகின்றது. இயங்கி அமெரிக்கா மற்றும் பிற சக்தி படைத்த நாடுகளான அவுஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா நெருங்கி செயலாற்றி வருகிறது. போட்டி நாடுகளை விட இந்தியாவில் செலவும் குறைவு ஆகும்.

பிரதமர் மோடியின் 'மேக் இன் இந்தியா' பிரசாரத்தில் விண்வெளித் துறை ஒரு முக்கிய பங்காற்றி வருகிறது. தொழில்நுட்ப கண்டுபிடிப்பில், முன்னணியில் இருப்பதுடன், உலகின் 5 ஆவது பெரிய பொருளாதாரம் என்ற நிலையை இலக்காக இந்தியா கொண்டு உள்ளது. வர்த்தக நட்பு சார்ந்த ஒன்றாக இந்திய விண்வெளி துறையை உருவாக்க அரசு முயற்சித்து வருகிறது. இதற்கு இந்தியாவின் நியூஸ்பேஸ் என்ற நிறுவனம் கைகொடுத்து உள்ளது. இஸ்ரோவின் ஓர் அங்கம் என பார்க்கப்படும் இந்நிறுவனம் 2019 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. "எங்களது தேவை பெரிய அளவில் உள்ளது" என அதன் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநரான டி. ராதாகிருஷ்ணன் கூறுகிறார்.

நம்பகத் தன்மை, செலவு குறைவு உள்ளிட்ட காரணிகளால் விண்வெளி வர்த்தகத்தில் சீனாவை, இந்தியா முந்தக் கூடிய சூழல் உள்ளது. இந்தியாவில் இருந்து செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தும்போது தோல்வி அடைவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்பது ஏற்கப்பட்டாலும், இந்தியா திறமையாகவே செயல்படுகிறது என ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் வானியல் இயற்பியலாளர் ஜோனாதன் மெக்டோவல் கூறுகிறார்.

அதற்கு சான்றாக, 2013ம் ஆண்டில் செவ்வாய்க்கு இந்தியா அனுப்பிய ஆர்பிட்டர் ஒன்றின் செலவு, அதே ஆண்டில் நாசா அனுப்பிய விண்வெளி ஆய்வு விண்கலத்தின் செலவை விட 10 இல் ஒரு பங்கு அளவே இருந்தது.

**எஸ். சாரங்கன்**

# திருகோணமலை பொதுவைத்தியசாலை சிற்றூழியர்களின் முன்மாதிரியான பணி

## சக்கரநாற்காலி பற்றாக்குறைக்குத் தீர்வு!

**திருகோணமலை பொதுவைத்தியசாலையில் நோயாளர்கள் அனுமதிக்கப்படும் இடத்தில் இருந்து நோயாளர்களை ஏற்றிச் செல்லும் வீல்ச் செயார் (சக்கர நாற்காலி) இற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.**

திருகோணமலை மாவட்டத்தில் அதிக வைத்தியசாலைகளில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அதிகளவிலான நோயாளர்கள் இவ்வைத்தியசாலைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.





இந்நிலையில் குறித்த நோயாளர்களை அனுமதிக்கும் இடத்தில் பத்துக்கும் மேற்பட்ட வீல்ச் செயார்கள் தேவைப்படுகின்ற போதிலும் அனைத்து வீல்ச் செயார்களும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன், உடைந்தும் காணப்படுகின்றன.



இவ்விடயம் தொடர்பாக குறித்து பிரிவில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்களது மேற்பார்வையாளர்களிடம் முறையிட்ட போதிலும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் புதிய வீல்ச் செயார்களை வழங்குவதற்கு நிதி வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்டனர்.

இருந்த போதிலும் உடைந்த நிலையில் இரும்புக்காக விற்பனை செய்யப்படவிருந்த குறித்த வீல்ச் செயார்களை களஞ்சியசாலையில் இருந்து பெற்றுக்கொண்டு தங்களுடைய முயற்சியினால் சிற்றூழியர்கள் திருத்தியமைத்தனர்.

யாரிடமும் கேட்கத் தேவையில்லை எனக்கூறி நோயாளர்களின் நலன் கருதி குறித்த பிரிவிற்கு பொறுப்பாக இருக்கின்ற சிற்றூழியர்கள் வீல்ச் செயார்களை திருத்தி, நிறம் பூசி பயன்படுத்தி வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக திருகோணமலை பொதுவைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த நிலையில், நோயாளர்களுக்கு தேவையான வீல்ச் செயார்கள் (சக்கர நாற்காலிகள்) தட்டுப்பாடாக காணப்பட்டன.

நோயாளர்களின் நலன் கருதி தங்களால் இயன்ற சேவையை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக குறித்த சிற்றூழியர்கள் தெரிவித்தனர்.

**அப்துல்சலாம் யாசீம்**
ரொட்டவெவ குறூப் நிருபர்

## இந்திய கண் சொட்டு மருந்து...

அமைச்சு அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது. Prednisolone கண் சொட்டு மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு வழங்குவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட மூன்று நோயாளிகள் Prednisolone பயன்படுத்தியதன் பின்னர் சில சிக்கல்களை எதிர்கொண்டதையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய கண் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளின் பின்னர் ஒரே சந்தர்ப்பத்தில் மூன்று நோயாளர்களுக்கு தொற்று ஏற்பட்டதாக, வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்ட அனைத்து மருந்துகளும் பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார். 48 மணித்தியாலங்களின் பின்னர் கிடைத்த அறிக்கைக்கமைய, நோய்த்தொற்றுக்கு காரணமான மருந்து கண்டறியப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை நிலையங்களில் கிருமிகள் இருக்கலாம் என்ற அடிப்படையில், கண் வைத்தியசாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாக, தேசிய கண் வைத்தியசாலையின் பேச்சாளர் கூறினார். இதேவேளை, சர்ச்சைக்குள்ளான கண் மருந்தை பயன்படுத்துவது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தற்காலிமாக நிறுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் Prednisolone ஐ பயன்படுத்திய ஒருவருக்கு கண்ணில் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

## சமாதானம், சகோதரத்துவம்...

ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று காலத்தைக் கழிப்பதாக மட்டுமின்றி, ஏனைய சமூகத்தவர் மீதான கரிசனை மற்றும் தியாகம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் சிறப்புகளை உலகிற்கு உரைப்பதாகவும் அமைந்துள்ளது.

சமாதானம் மற்றும் சகோதரத்துவம் கொண்ட வளமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு நாம் முன்னெடுக்கும் பணிகளின்போது, இந்த சமூகக் கோட்பாடுகள் ஒரு சிறந்த முன்னுதாரணமாக இருப்பதோடு, அவற்றை சமூக நலனுக்காக பயன்படுத்த நாம் அனைவரும் உறுதி பூண வேண்டும்.

சாதி, மத பேதமின்றி ஒரே இலங்கை மக்களாக ஒன்றிணைந்து எமது தாய் நாட்டை சுபீட்சத்தை நோக்கி இட்டுச் செல்லவும் சுதந்திரம், சமத்துவம், மனித மாண்புகள் நிறைந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப இவ்வருட நோன்புப் பெருநாள் அருட்கொடையாக அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். இலங்கை உட்பட உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் சகோதர மக்களுக்கு அமைதி, நல்லிணக்கம் நிறைந்த மகிழ்ச்சியான நோன்புப் பெருநாளாக அமையட்டும்" என ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## சமூகத்துக்கான போதனைகள்...

பன்முகத்தன்மைக்கு முன்மாதிரியான அர்த்தத்தை வழங்கி வருகின்றனர். உலகம் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வரும் இவ்வேளையில், பாதிக்கப்பட்ட மக்கள் மீதான மனிதாபிமான உணர்வை வளர்த்து சிறந்ததோர் சூழலை கட்டியெழுப்புவதற்கு ரமழான் பண்டிகைக்காலம் பெரிதும் உதவுகிறது. இலங்கை முஸ்லிம் சமூகம், நாட்டின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் வர்த்தகத்துறை, கல்வி மற்றும் பல்வேறு தொழில் துறைகள், விளையாட்டு மற்றும் கலாசார துறைகளுக்கும் ஆற்றிவரும் செயற்றிறமான பங்களிப்புக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் தற்போது கடந்து வரும் மிகவும் கடினமான இலக்குகளை வெற்றிகொள்வதற்கு அனைத்து இனங்களினதும் ஒற்றுமையானதும் செயற்றிறமானதுமான பங்களிப்புகளை மேலும் பலமாக முன்கொண்டு செல்வதற்கு இந்த விசேடமான காலகட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் அர்ப்பணிப்பை எதிர்பார்க்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். உங்கள் அனைவருக்கும் 'இனிய ஈதுல் பித்ர் வாழ்த்துகள்' என்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய இலங்கையை உருவாக்க ...

திருக்குர்ஆன் மற்றும் முஹம்மது நபியின் போதனைகளின்படி சமயச் சடங்குகளை முறையாகக் கடைப்பிடித்து இலங்கை முஸ்லிம் மக்களும் மிக்க மகிழ்ச்சியுடன் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

ஈதுல் பித்ர் எனப்படும் 'நோன்புப் பெருநாள்', அடுத்த மாதத்திற்கான தலைப் பிறை தென்பட்டதும் ஆரம்பமாகின்றது.

ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பதன் மூலம் இறைவனுக்கும் அடியானுக்கும் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்த ஒரு தனித்துவமான வாய்ப்பை உருவாக்கி, அதன் மூலம் உயர்ந்த மனித நற்பண்புகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களின் மதிப்பை எடுத்துரைப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

பரஸ்பர நல்லிணக்கத்துடனும் மனிதாபிமான நெருக்கத்துடனும் நாம் நடந்து கொண்டால், உலகம் இதனைவிட மிகவும் அமைதியானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பரோபகார அடிப்படையில் சமூகத்தில் வசதியுள்ளோர் இல்லாதோர் இடைவெளியைக் குறைத்து அனைவருக்கும் சகோதரத்துவ கரங்களை நீட்டும் ஒரு வாய்ப்பாகவும் இந்த பெருநாளைக் குறிப்பிடலாம்.

நல்லிணக்கத்துடனும் ஒற்றுமையுடனும் ஒரு புதிய இலங்கையை உருவாக்க இவ்வாறான கலாசார, சமய நிகழ்வுகள் மூலம் கிடைக்கின்ற ஆதரவு அளப்பரியது. குறிப்பாக, பல்லாண்டு காலம் இந்நாட்டு சகோதர முஸ்லிம் மக்கள் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதுடன், இலங்கையின் அடையாளத்தில் முஸ்லிம் சகோதரர்களும் பங்குதாரர்களாவர். அதனை நாம் மிகுந்த மரியாதையுடன் நினைவுகூருவதுடன், மனித குலத்தின் முன்னேற்றத்திற்கும் நல்லிணக்கப் பாதைக்கும் துணிச்சலுடன் உழைக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் நினைவுகூருவோம்" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

## 'வசத் சிரிய 2023' புத்தாண்டு விழா...

பல மாகாணங்களைச் சேர்ந்தவர்களும் இந்தப் போட்டிகளில் பங்கெடுக்க ஆர்வம் காட்டி வருவதுடன், வெவ்வேறான குழுக்கள் இந்தப் போட்டிகளில் பங்கேற்க விண்ணப்பித்துள்ளன.

உள்நாட்டு பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அரச துறையினருக்கும், திறந்த மற்றும் வெளிப்பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளில் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டதாக இப்புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

'வசத் சிரிய 2023' அழகிப் போட்டியில் பங்கெடுக்க 20 முதல் 35 வயதுக்குட்பட்ட யுவதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. 'வசத் சிரிய 2023' புத்தாண்டு அழகியாக கிரீடத்தை சுவீகரிப்பவருக்கு தங்கப் பரிசுடன் 1,50,000 பணப்பரிசு மற்றும் ஏனைய பரிசுகள் பலவும் வழங்கப்படும். இரண்டாம் இடத்துக்கு 1,00,000 பணப்பரிசும் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும் அதேநேரம், மூன்றாம் இடத்துக்கு 50,000 பணப்பரிசும் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும்.

'வசத் சிரிய 2023' புத்தாண்டு அழகனாக கிரீடத்தை சுவீகரிப்பவருக்கு 1,50,000 பணப்பரிசு மற்றும் ஏனைய பரிசுகள் பலவும் வழங்கப்படும். இரண்டாம் இடத்துக்கு1,00,000 பணப்பரிசும் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும் அதே நேரம், மூன்றாம் இடத்துக்கு 50,000 பணப்பரிசும் ஏனைய பரிசுகளும் வழங்கப்படும்.

மரதன் போட்டிகளின் (ஆண்கள்) முதலாமிடம் பெறுபவருக்கு 75,000 ரூபாவும் இரண்டாம் இடம் பெறுபவருக்கு 50,000 ரூபாவும் மூன்றாமிடம் பெறுபவருக்கு 30,000 ரூபாவும் வழங்கப்படும். நான்கு தொடக்கம் பத்து வரையிலான இடங்களை பெறுவோருக்கு 10,000 ரூபா வீதம் வழங்கப்படும்.

மரதன் போட்டிகளின் (பெண்கள்) முதலாமிடம் பெறுபவருக்கு 50,000 ரூபாவும் இரண்டாம் இடம் பெறுபவருக்கு 30,000 ரூபாவும் மூன்றாமிடம் பெறுபவருக்கு 20,000 ரூபாவும் வழங்கப்படும். நான்கு தொடக்கம் பத்து வரையிலான இடங்களை பெறுவோருக்கு 7,500 ரூபா வீதம் வழங்கப்படும்.

ஸ்டேண்டட் சைக்கிளோட்டப் போட்டிகள் (ஆண் /பெண்) நாடு தழுவிய ரீதியில் நடத்தப்படவுள்ளதுடன், 1973ஆம் ஆண்டுக்கு பின்னரும் 2004ஆம் ஆண்டுக்கு முன்னரும் பிறந்த இலங்கை சைக்கிளோட்ட (ஆண்/ பெண்) வீர, வீராங்கனைகள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

ஸ்டேண்டட் சைக்கிளோட்டப் போட்டிகள் (ஆண்கள்) முதலாமிடம் 1,00,000 ரூபாவும் இரண்டாம் இடத்திற்கு 75,000 ரூபாவும் மூன்றாமிடத்திற்கு 50,000 ரூபாவும் நான்காம் இடத்திற்கு 30,000 ரூபாவும் ஐந்தாம் இடத்திற்கு 20,000 ரூபாவும் 6 – 10 வரையான இடங்களுக்கு 9,000 ரூபா வீதமும் 11 15 ஆம் இடங்களுக்கு 5,000 ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது. பெண்களுக்கான போட்டியில் முதலாமிடம் பெறுபவருக்கு 50,000 ரூபாவும் இரண்டாம் இடத்துக்கு 40,000 ரூபாவும் மூன்றாம் இடத்துக்கு 30,000 ரூபாவும் நான்காம் இடத்துக்கு 20,000 ரூபாவும் ஐந்தாம் இடத்துக்கு 15,000 ரூபாவும் 6 – 10 வரையான இடங்களுக்கு 9,000 ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

இந்நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் புத்தாண்டு சிறப்பம்சங்களைக் கண்டுகொள்ளும் வகையில், பல்வேறு போட்டி நிகழ்வுகளுடன் கூடியதாக புத்தாண்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். புத்தாண்டு நிகழ்வுகளின் நிறைவம்சமாக இன்று இரவு 7.00 மணிக்கு வளாகத்திலேயே மாபெரும் இசை நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கொழும்பு துறைமுகத்தில்...

போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

"அரச தனியார் பங்காளித்துவமாக ஆரம்பிக்கப்படும் முழுமையான திட்டமும் 50 வருட காலப்பகுதியின் பின்னர் மீண்டும் இலங்கை துறைமுக அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படும்.

சைனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் 70% முதலீடு செய்யும் அதேவேளை, அக்சஸ் இன்ஜினியரிங் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை இரண்டும் தலா 15% முதலீடுகளை செய்யும்.

ஏனைய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதை புறக்கணித்த வேளையில், 2019ஆம் ஆண்டில் CICT க்காக 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளது" என, சீன வர்த்தகர்கள் குழுமத்தின் தலைவர் Miao Tianmin தெரிவித்தார். "நாங்கள் இலங்கையுடன் சிறந்த உறவுகளை கொண்டு வருகிறோம். எதிர்காலத்திலும் இதேபோன்ற முதலீடுகளை மேற்கொள்வோம்" என்றும் தெரிவித்தார். இலங்கை துறைமுக அதிகாரசபை, CBD மற்றும் போர்ட் சிட்டிக்கு அருகாமையில் 5 ஹெக்டேயர்களை ஒதுக்கி, அதற்கு ஈடாக குத்தகை வாடகையுடன் இலாபத்தின் ஒரு பகுதியும் மற்றும் இதர நன்மைகளைப் பெறுமென, துறைமுக அதிகாரசபை தலைவர் கீத் டி.பெர்னார்ட் கூறினார். "உத்தேச மத்திய நிலையம் துறைமுக அணுகல் பாதைக்கு சமனாக உயர்த்தப்பட்டு, அதிவேக நெடுஞ்சாலையுடன் நேரடியாக இணைக்கப்படும். இது இந்த ஆண்டு இறுதிக்குள் விமான நிலையத்துடன் நேரடி இணைப்பைத் கொண்டிருக்கும். திட்ட நிறுவனத்தால் 26 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முன்பணமாக செலுத்தப்படவுள்ளதுடன், உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் 126 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சிஎம்போர்ட் மூலம் இலங்கையில் வைப்பிலிடப்படும்.

இந்தத் திட்டம் குறைந்தபட்சம் 1,800 நேரடி வேலைவாய்ப்புகளையும் 10,500 மறைமுக வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும். "இந்த திட்டம் கொழும்பு துறைமுகத்தின் கேந்திர நிலையத்தை வலுப்படுத்துவதுடன், துறைமுகத்துக்கு அதிக கொள்கலன்களை ஈர்க்க உதவும். துறைமுகத்திலுள்ள அனைத்து முனையங்களுக்கும் இத்திட்டம் பயனளிக்கும்.

இத்திட்டம் LCL, MCC, CFS, பிணைக்கப்பட்ட களஞ்சியசாலை மற்றும் சேமிப்பு களஞ்சியசாலை மற்றும் அலுவலக இடம் குத்தகை மற்றும் பிற பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் போன்ற பல்வேறு சேவைகளை வழங்கும்.

சர்வதேச வர்த்தகத்தின் வசதிக்காக காட்சியறைகள் இடங்கள் மற்றும் பிற வசதிகளும் தனித்தனி பிரிவுகளில் சேர்க்கப்படும். 20 வருடங்களுக்கும் மேலாக துறைமுகம் தொடர்பான சேவைகளை வழங்குவதில் தாங்கள் ஈடுபட்டு வருவதாகவும், இந்த அளவிலான திட்டத்தில் தாங்கள் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும்" என்றும், அக்சஸ் குழுமத்தின் தலைவர் சுமல் பெரேரா இதன்போது தெரிவித்தார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்...

குண்டுத்தாக்குதல் சம்பவம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இவ்வாறு மக்கள் மத்தியில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒற்றுமை மற்றும் ஐக்கியம் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மக்களின் ஜனநாயக உரிமைகள், மக்களின் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை நசுக்கி, ஏகாதிபத்தியமாக நடந்துகொண்டு, மக்கள் இறைமையாண்மையை உதைத்து தள்ளுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற எம்நாட்டின் ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கைகொள்ள முடியாதெனவும், அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குல்கள் சம்பவத்தில் பலியானவர்களின் ஆன்மா இளைப்பாற்றிக்கான நான்காவது ஆண்டு நினைவு தின வைபவத்தில் கலந்துகொண்டு கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

"கொழும்பு கொச்சிக்கடை திருத்தலம், கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயங்களில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழாவில் கலந்துகொள்ள வந்தவர்கள், கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களில் உணவருந்துவதற்காக வந்திருந்தவர்கள் மற்றும் அங்கு தொழில் புரிந்தவர்கள் என 272 பேர் பலியாகியதுடன், 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் பலரும் இன்னமும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறு பலியானவர்கள் தங்களது தாய், தந்தை, உடன் பிறப்புகள் மற்றும் உறவினர்களை இழந்து தவிக்கின்றனர். இவர்களுக்கு ஆறுதல் கிடைக்க வேண்டும் படியும், காயமடைந்தவர்கள் விரைவாக சுகமடைய வேண்டும் படியும் நான் கடவுளிடம் மன்றாடுகின்றேன்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் அசம்பாவித சம்பவத்தின் ஊடாக இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமை அடைந்துள்ளனர். எம்நாட்டு மக்கள் மத்தியில் தனித்துவமான சிறந்த சிந்தனையொன்று தோற்றம் பெற்றுள்ளது. இதன் பலனாக அரசியல் தேவைகளுக்காக நாட்டில் இன முறுகல்களையும் குரோதங்களையும் உருவாக்கி தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கின்ற அரசியல்வாதிகளின் எண்ணங்களும் செயல்பாடுகளும் தோற்கடிக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத்தாக்குல்கள் நடத்தப்படப் போவதாக இந்திய புலனாய்வுத்துறையினரால் இலங்கை பாதுகாப்புப் பிரிவினருக்கு நான்கு சந்தர்ப்பங்களில் முன்னறிவித்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும், அதனைத் தடுக்காமல் இருப்பதற்கு எந்தவித முயற்சிகளும் எடுக்காதது ஏன்?

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் முழுமையான அறிக்கையை இது வரையில் பொதுமக்களின் பார்வைக்கு வழங்காது உள்ளனர். அவ்வாறு அதனை வெளியிடாமல் இருப்பது, தங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற காரணத்தினால் ஆகும். குறைந்தபட்சம் அதிலுள்ள பரிந்துரைகளை கூட செயல்படுத்தாது உள்ளனர்.

கட்டுவாப்பிட்டிய தேவாலய தற்கொலை குண்டுத்தாக்குதலில் ஈடுபட்டவரின் மனைவியும் சாய்ந்தமருது தற்கொலை குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையவரான சாரா ஜெஸ்மின் எனும் புலஸ்தினி ராஜேந்திரன் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்தாக கூறப்பட்டு வந்தபோதும், அவரின் டி.என்.ஏ. பரிசோதனையை மூன்றாவது தடவையாக பரிசோதிக்குமாறு உத்தரவிட்டது யார்? அவர்தான் உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் தொடர்புபட்டவர் என தெரிய வருகிறது " என்றார்.


Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633


## Stock Market closes the week on a quiet note...

**Daily Market Watch**
21st April 2023

### Market Commentary

With most investors still waiting for clarity on the debt restructuring, the All Share Price Index closed the week on a mildly negative note. Turnover continued to remain low at LKR 966.8 mn, with Hemas Holdings accounting for 26.6% of the total. Amongst the price gainers for the day, John Keells Holdings, Ceylon Tobacco and Hemas Holdings recorded modest gains, while Expolanka Holdings, Hayleys and Lanka IOC recorded slight price declines. Once the situation regarding the debt restructuring is clarified, we expect increased investor participation in the stock market.


### Top Gainers and Loosers





### Market Performance

| | 21.04.2023 | 20.04.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,260.4 | 9,279.2 | -0.20 |
| S&P SL 20 Index | 2,711.1 | 2,718.2 | -0.26 |
| Turnover (LKR mn) | 966.8 | 933.5 | 3.6 |
| Foreign Purchases (LKR mn) | 311.5 | 247.1 | 26.1 |
| Foreign Sales (LKR mn) | 83.5 | 103.5 | -19.3 |
| Market Cap (LKR bn) | 3,943.7 | 3,955.1 | -0.3 |
| Market Cap (US$ bn) | 12.3 | 12.3 | -0.3 |
| Traded Companies | 240 | 234 | 2.6 |
| Market PER (x) | 5.1 | 5.1 | -0.4 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | -1.1 |
| Dividend Yield (%) | 4.0 | 4.0 | 0.3 |


### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown




### Key Rates

| | 21.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 21.45% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 22.96% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

LB Finance PLC (LFIN) - LKR 2.00. XD date – 25.04.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date – 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date – 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date – 02.05.2023.

Overseas Realty (Ceylon) PLC (OSEA) - LKR 1.25. XD date – 27.04.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 Shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

## பிறப்புச் சான்றிதழ்...

வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக, ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிரந்தர வதிவிடத்துடன், பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் தேசிய அடையாள அட்டை பெறாத 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கை பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்கலாம், என்றும் அவர் தெரிவித்தார்.

## நோன்பு பெருநாள் இன்று...

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு தலைவர் மௌலவி எம் பி எம் ஹிஷாம் பத்தாஹி தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் அஷ் ஷெய்க் எம் ஐ ரிஸ்வி முப்தி மற்றும் முஸ்லிம் சமய கலாச்சார திணைக்கள பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் ஆகியோர் மேற்படி உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுத்தனர்.

## A/L தமிழ்மொழி...

யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருணாகல் ஆகிய நகரங்களை அண்மித்து காணப்படும் விடைத்தால் திருத்தும் நிலையங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாவும் பரீட்சைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூல பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்கான விண்ணப்பங்கள் போதிய அளவில் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அந்த பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாக உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

## அக்குறணை சம்பவம் தொடர்பில்...

வெளிவந்த தகவல் தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பதில் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். எஸ்.எம்.தாஸிம் மற்றும் பதில் தலைவர் அஷ்ஷைக் ஏ.எல்.எம்.ரிழா ஆகியோர் கைச்சாத்திட்டு பொலிஸ் மாஅதிபர் சந்தன டி விக்கிரமரத்னவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்டி, அக்குறணையில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படலாமென தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்து, கண்டி உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அலவத்துகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் அக்குறணை அஸ்னா மஸ்ஜித் நிர்வாகிகளைச் சந்தித்து கலந்துரையாடியமை தொடர்பில் ஜம்இய்யா கவனம் செலுத்தி வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு அதிகாரிகள் உரிய விசாரணைகளை நடத்தி இத்தகவலின் நம்பகத் தன்மையையும் அதன் விபரங்களையும் வெளிக்கொண்டு வரவேண்டும்.

## நீதிக்காக காத்திருப்போருக்கு...

தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அவர் தனது டுவிட்டர் செய்தியில், "நான்கு வருடங்களுக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்து அமெரிக்கர்கள் உட்பட நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களை இன்று நான் நினைவுகூருகிறேன். பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களுக்கும் அமெரிக்கா மரியாதை செலுத்துகிறது. நீதிக்காகக் காத்திருப்பவர்களுடன் அமெரிக்கா ஐக்கியமாக நிற்கின்றது" தெரிவித்துள்ளார்.

## வியட்நாமிலிருந்து மேலும்...

விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட இலங்கையரில் 151 பேர் வியட்நாமிலிருந்து நாடு கடத்தப்பட்டு 2022 டிசம்பர் 28ஆம் திகதியன்று இலங்கை வந்தடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, வியட்நாமிலிருந்து நாடு கடத்தப்பட்ட மேலும் 23 இலங்கையர் இந்த வாரம் கட்டுநாயக்கவை வந்தடைந்ததாகவும், கடற்படையினர் தெரிவித்தனர். ஏப்ரல் 19ஆம் திகதி நாடு கடத்தப்பட்ட இந்தக் குழுவில் 15 ஆண்களும் 6 பெண்களும் அடங்குவர். அவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் வசிப்பவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## 71,000 விவசாயிகளுக்கு ...

இதன்படி பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத்தளம் மற்றும் குருநாகல் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் □ ஹெக்டேயருக்கும் குறைவான நிலத்தில் நெல் பயிரிடும் விவசாயக் குடும்பங்கள் இந்த இலவச யூரியா உரத்தை பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு அதிகாரபூர்வமாக இந்த ஆண்டு விவசாயிகளுக்கு மானியமாக 15,000 மில்லியன் ரூபா பெறுமதியான யூரியா உரம் மற்றும் விவசாய உபகரணங்களை இன்று (22) விவசாய அமைச்சுக்கு வழங்கவுள்ளன.

## கொவிட் தொற்று காரணமாக...

சிகிச்சை பெற்று வருபவர்களில் ஐந்து பேருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு (வெண்டிலேட்டர்) சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அவர்களில் ஒருவரின் உடல் நிலை மோசமாக காணப்பட்டது. அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்த போதே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். எஞ்சிய 4 பேருக்கும் ஒட்சிசன் வழங்கப்பட்டு (வெண்டிலேட்டர்) சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக, ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 2022 மே 09ஆம் திகதி சம்பவம்...

சந்தேகநபர்கள் மருதானை மற்றும் கொழும்பு 12 ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையையடுத்து, இவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## வலம்புரிச் சங்கு வைத்திருந்த ...

செய்யப்பட்டுள்ளார். விலையை நிர்ணயிக்க முடியாத வகையிலான இந்த வலம்புரிச் சங்கை ஒருவர் பதுக்கி வைத்திருப்பதாக வெலிசர கடற்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, மீரிகம பொலிஸ் நிலையத்தின் இரவுநேர நடமாடும் ரோந்துக் குழுவினர் மேற்கொண்ட தேடுதலின் போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வலம்புரிச் சங்கு வனஜீவராசி அதிகாரியிடம் எவ்வாறு வந்தது என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மேலதிக விசாரணையை மீரிகம பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## பல கோடி பெறுமதியான...

செய்துள்ளனர். இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 14.3 கிலோ எடையுடைய அம்பர் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மீகொட பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடையவரென விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. திமிங்கில வாந்தி, உலகின் மிக விலையுயர்ந்த வாசனைத் திரவியத்தை தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பஸ்சுக்குள் பெண்ணுக்கு ...

கடமையாற்றிய மரதன்கடவல பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மது போதையில் பஸ்ஸில் ஏறிய நபரொருவர், இப்பெண் மீது பாலியல் தொந்தரவு செய்த போது, அச்சமடைந்த இப்பெண் பஸ்ஸிலிருந்து இறங்க எத்தனித்த போதே தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நல்லூரிலுள்ள விடுதி மீது... (3 ஆம் பக்கத் தொடர்)

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தோட்ட தொழிலாளர்களின்... 03ஆம் பக்கத் தொடர்

இது தொடர்பில், உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் சதாசிவம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அமைச்சு ஒன்றின்... 03ஆம் பக்கத் தொடர்

அவர் கடந்த புதன்கிழமை சிலாபம் கொட்டாரமுல்லையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இதற்கு முன்னரும் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக ஆள்மாறாட்டம் செய்து, சில பொலிஸ் அதிகாரிகளுக்கு அவர் அச்சுறுத்தல் விடுத்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச்சந்தேகநபரை கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, இவர் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## இன்னும் இரண்டு... 03ஆம் பக்கத் தொடர்

எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எனினும், முட்டை ஒன்றின் உற்பத்தி செலவு 30 ரூபாவுக்கும் குறைவாக உள்ளதாக முட்டை விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்டன் நிஷாந்த அப்புஹாமி குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக, எதிர்காலத்தில் முட்டையின் விலையை குறைக்க முடியுமென, அவர் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்





வரலாற்று சிறப்புமிக்க திருக்கோணேசர் ஆலய தேர் உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை விமர்சையாக நடைபெற்றது. கோணேச பெருமான் மாதுமை அம்பாள் சமேதம் தேரில் ஆரோகித்து வீதி உலா வருவதைப் படத்தில் காணலாம். (படம்: தம்பலகாமம் நிருபர்)



பாலமுனை ரைற்றான் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்தார் நிகழ்வும் கௌரவிப்பும் கழகத்தின் தலைவர் எம்.ஐ.அர்சாத் தலைமையில் நேற்று முன்தினம் (19) பாலமுனை பீச் பார்க்கில் இடம்பெற்ற போது,.. (படம்: பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)



சர்வதேச பிறை அடிப்படையில் இடம்பெற்ற புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் நேற்று (21) வெள்ளிக்கிழமை கல்முனையில் இடம்பெற்ற போது... (படங்கள் கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## மட்டக்களப்பு நகரில் நினைவேந்தல் நிகழ்வு





**மட்டக்களப்பு விசேட நிருபர்**

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் மட்டக்களப்பு நகரில் நேற்று (21) நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட சர்வ மத பேரவை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் எஸ்.சிவபாலன் குருக்கள், இயேசு சபைத் துறவி அருட்தந்தை ஜோசப் மேரி, அருட்தந்தை ஜெகதீஸ் தலைமையில் மட்டக்களப்பு ஆயர் இல்லத்திலிருந்து சாள்ஸ் மண்டபம் வரை தாக்குதலை நினைவு கூர்ந்து பதாகைகளை ஏந்தி ஊர்வலமாகச் சென்றனர்.

பின்பு பல் சமயத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளால் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இதேவேளை மட்டக்களப்பு மாநகரினால் காந்திப் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட தூபியில் மாநகரசபையின் முன்னாள் முதல்வர் தி.சரவணபவன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

## சாய்ந்தமருதில் முன்னறிவிப்பு இன்றி அடிக்கடி நீர் வெட்டு

மக்கள் அசௌகரியம்

சாய்ந்தமருதில் எந்த முன்னறிவித்தலுமின்றி அடிக்கடி நீர் வெட்டு இடம்பெறுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் புனித நோன்பு காலமான ரமழானில் மிகுந்த இன்னல்களை அனுபவிப்பதோடு, உரிய நேரத்தில் செய்ய வேண்டிய கடமைகளைக் கூட சரியான நேரத்தில் நிறைவேற்ற முடியாது கஷ்டப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளனர். ஒவ்வொரு நாளும் இரண்டு அல்லது மூன்று தடவைகளுக்கு மேல் நீர் வெட்டினை மேற்கொள்கின்றனர்.

எனவே, பெருநாள் காலம் என்பதாலும், உரிய நேரத்தில் கடமைகளைச் செய்ய வேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அரச காணிகள் பகிர்ந்தளிக்கும் போது

## மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்

**கிண்ணியா மத்திய நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தில் அரச காணிகள் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு வழங்கப்படும் போது அது குறித்த விடயங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் அரச காணிகள் வழங்கப்படுகையில் மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரால தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட செயலகத்தில் இணைத்தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

தற்போது நிலவும் கடும் உஷ்ணமான காலநிலை காரணமாக பாடசாலை மாணவர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இது குறித்து ஆராய்ந்து மாணவர்களின் குடிநீர் பிரச்சினை தற்காலிகமாக தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் இக்காலப்பகுதியில் குறிப்பாக மாணவர்களை திறந்த வெளியில் வைத்துக்கொண்டு கூட்டங்கள் உட்பட ஏனைய செயற்பாடுகளை நடாத்துவதை தவிர்ப்பது குறித்து உரிய அதிகாரிகளை அறிவுறுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். மாவட்டத்திற்கு நல்ல வேலைத்திட்டங்கள் வருகின்றபோது அதனை கொண்டு வருபவர் எந்த இனத்தை சேர்ந்தவர் என நோக்காது அத்திட்டத்தினால் மாவட்டத்திற்கு நலன் கிடைக்கப்பெறுமானால் அதனை உரிய நியமங்களை பின்பற்றி நடைமுறைப்படுத்த அதிகாரிகள் செயற்படல் வேண்டும். அவை குறிப்பாக பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவுக்கு முன்வைக்கப்பட்டு கலந்துரையாடல் மூலம் சாதகமான விளைவுகளை பெற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு நினைவஞ்சலி

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**






மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளின் நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளின் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று (21) உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டதுடன் இதன் பிரதான நிகழ்வு பிள்ளையார் அடியில் உள்ள சீயோன் தேவாலயத்தில் காலை தேவாலய பிரதம போதகர் ரோசான் மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு உயிரிழந்த உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டியும், இந்த குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட உறவுகளின் ஆசீர்வாதம் வேண்டியும், விசேட வழிபாடுகள் பிரதம போதகரால் முன்னெடுக்கப்பட்டது.

## மூதூரில் பாடசாலை மாணவர்களுக்கு புத்தாடைகள் வழங்கி வைப்பு

**மூதூர் தினகரன் நிருபர்**


மூதூர் பிரதேசத்தில் நலிவுற்ற மாணவர்களுக்காக இயங்கிவரும் மூதூர் டயமன் விசேட பாடசாலையில் பயிலும் 50 மாணவர்களுக்கு புனித ரமழானை முன்னிட்டு 'ஸ்ரீ லங்கன் கிறீன் ஹெயார்' நிறுவனத்தினர் புத்தாடைகளை வியாழக்கிழமை (20) வழங்கி வைத்தனர்.

மூதூர் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும், டயமன் விசேட பாடசாலை அதிபருமான நஸார் பாத்திமா அகீதா இம்மாணவர்களின் பெற்றோர்கள் குடும்ப பொருளாதார ரீதியில் அடைந்துள்ள கஷ்டங்கள் மற்றும் நலிவுற்ற நிலையில் பயிலும் இம்மாணவ, மாணவிகளுக்கு உதவும் முகமாக புத்தாடைகளை பெற்றுத்தருமாறு நிறுவனத்தினரிடம் வேண்டி இருந்தனர்.

மேலும் இம்மாணவர்களின் கல்விக்காக இயன்ற பங்களிப்பாகவும், உரிய ஆடைகளை பெற்றுக் கொடுக்கவும் முன்வந்த நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.பி.எம்.முஸ்தபாவின் உதவியுடன் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப உரிய ஆடைகள் தெரிவு

## கடலரிப்புக்கு உள்ளாகும் திருக்கோவில் மயானம்

**காரைதீவு குறூப் நிருபர்**





திருக்கோவில் பிரதேச மயானம் கடலரிப்பின் ஆபத்துக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறது.

கடந்த சில நாட்களாக திருக்கோவில் மயான பிரதேசத்தில் கடல் அரிப்பு மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

அதன் காரணமாக அங்கிருந்த கல்லறைகள் சில கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு இருக்கின்றன .

மயானப் பிரதேசமும் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரனிடம் கேட்டபோது,

மயானப்பகுதி வழமை போல கடல் அரிப்புக்கு உள்ளாகி வருகின்றது உண்மை. கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினர் அங்கு கல் போடுவதற்கான ஏற்பாடுகளை செய்து இருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு முன்பாக பாரிய கடலரிப்பு ஏற்பட்டிருந்த வேளையிலே கல்லணை போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறையில்

## பெண்கள் வலையமைப்பினால் கவனயீர்ப்பு போராட்டம்



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 4 ஆம் கிராமத்தில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பெண்கள் அமைப்புக்களினால் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது. வடக்கு கிழக்கு பெண் கூட்டின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களையும் எழுப்பினர்.




ஊவா மாகாண சபையின்

# 17 அரச நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் நியமனம்





பதுளை தினகரன் விசேட நிருபர்

ஊவா மாகாண சபையின் 17 அரச நிறுவனங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர்களுக்கான நியமனக் கடித ங்கள் நேற்று ஊவா மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் வைத்து ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மினால் வழங்கப்பட்டன.

ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கு பதிலாக புதிதாக நியமிக்கப்பட்டவர்களின் பட்டியலுக்கமைய, அவர்கள் ஆளுநரிடமிருந்து நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டனர். அரசின் புதிய ஓய்வூதியக் கொள்கையின்படி அரச சேவையில் பணியாற்றி 60 வயதை பூர்த்தி செய்து ஓய்வு பெற்ற நிறுவனப் பிரதானிகளின் வெற்றிடங்களுக்கு புதிய பிரதானிகள் நியமனம் செய்யப்பட்டனர். இதன்போது பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் ஆகியவற்றுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஊவா மாகாண பிரதான செயலாளர் P.B. விஜயரத்ன மற்றும் ஆளுநரின் செயலாளர் ஆர். எச்.சீ. பிரியந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜி.எம். ஜோபியாஸ் ஊவா மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகவும் எச்.எம்.ஜே. ஹேரத் ஊவா மாகாண சபை பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் ஊவா மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்கள பணிப்பாளராக ஆர். டி.எல்.எஸ். ஜயசிங்க பொறியியலாளராக எம்.ஜே.டி. கங்காநந்த மற்றும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் / ஊவா மாகாணக் கல்விப் பணிப்பாளராக ஏ.எச்.ஆர். அமரதாச மேலதிக மாகாண கல்வி அபிவிருத்தி பணிப்பாளராக ஜே.எம். சேனாதீர பதுளை வலயக் கல்விப் பணிப்பாளராக எச்.எம்.எம்.டி. ஹேரத் பசறை வலயக் கல்விப் பணிப்பாளராக சரத் ரணசிங்க வெலிமடை வலயக் கல்விப் பணிப்பாளராக சரீனா பேகம், பண்டாரவளை வலயக் கல்விப் பணிப்பாளராக எஸ்.எம். ஹெட்டியாராச்சி வியலுவ வலயக் கல்விப் பணிப்பாளராக பி.ஜி.கே.கே.எஸ். விமலவீர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# 14 வயது பாடசாலை மாணவிக்கு ஆசிரியரால் பாலியல் தொந்தரவு

ஹாலிஎல பிரதேசத்தில் 14 வயது மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டில் 53 வயதான ஆசிரியர் ஒருவர் ஹாலிஎல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹாலிஎல பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கடமையாற்றும் ஆசிரியரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர்

தன்னிடம் கற்கும் 14 வயதான மாணவியை மாலைநேர மேலதிக வகுப்புக்காக தனது வீட்டுக்கு வருமாறு அழைத்துள்ளார்.

இந்நிலையில், மாலை நேர வகுப்பின் போது இடைவேளை வழங்கி அனைத்து மாணவர்களையும் வெளியே செல்லுமாறு கூறிவிட்டு மாணவியை மட்டும் பேச வேண்டும் எனக்கூறி நிற்குமாறு தெரிவித்துள்ளார். பின்னர் தனது கையடக்க தொலைபேசியில் ஆபாச காணொளிகளை எடுத்து மாணவியை அதை பார்க்குமாறு வற்புறுத்தியுள்ளார். மாணவி அதை பார்க்க மறுத்த போது மாணவியை பின்னால் இருந்து அணைத்தபடி தன்னுடைய கையடக்கதொலைபேசியில் செல்பி எடுத்துள்ளார்.

அதன்பின்னர் பலவாறும் மாணவியோடு ஆசிரியர் புகைப்படம் எடுத்துள்ளார்.

இவ்விடயம் பொலிஸாருக்கு தெரியவந்ததையடுத்து ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஆசிரியரை விசாரணை செய்த போது அவரது கையடக்க தொலைபேசியில் ஆபாச காணொளிகளும் புகைப்படங்களும் இருந்ததை பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் பதுளை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த வானில் கஞ்சா போதைப்பொருள்

## கணவன், மனைவி கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த வானிலிருந்து கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. மேலும் இச்சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் வானில் பயணித்த கணவன், மனைவி கைது செய்யப்பட்டுள்ளனர். பெல்மதுளை பாத்தகட பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடையை மீறிச் செல்ல முற்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வானிலிருந்து 6 கிலோ கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

# லிந்துலை ஹொல்றீம் தோட்டத்தில் தாய் படுகொலை; நகைகளும் கொள்ளை

ஆ.ரமேஸ்

லிந்துலை ஹொல்றீம் தோட்டத்தில் 69 வயது மதிக்கத்தக்க தாயொருவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வெட்டுக் காயங்களுடன் தனி வீடு ஒன்றின் சமையலறையிலிருந்து நேற்று காலை இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

அக்கரப்பத்தனை சின்னநாகவத்தை தோட்டத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் சத்தியபாமா என்ற 68 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த தாய் கடந்த ஞாயிற்றுக்கிழமை சின்ன நாகவத்தை தோட்டத்திலிருந்து லிந்துலை ஹொல்றீம் தோட்டத்தில் வசிக்கும் மருமகனின் வீட்டுக்கு விருந்தாளியாக வந்ததாக தெரியவந்துள்ளது.

தனது வீட்டிலிருந்து தங்க நகைகள் அணிந்து தனது மருமகனின் வீட்டுக்கு வந்துள்ளார்.

இதன்போதே இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இவர் அணிந்து வந்த தங்கநகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மருமகன், மகள், பிள்ளைகள் இருவர் வசிக்கும் இந்த வீட்டிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் தாய் தனியாக இருந்துள்ளார். அவரது காது, கழுத்து மற்றும் மார்புப் பகுதியில் பாரிய வெட்டுக்காயங்கள் காணப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற போது பத்து வயது சிறுமி, ஹொல்றீம் தோட்ட பாடசாலைக்கு சென்றிருந்துள்ளார். அவர் இடைநடுவே வீட்டுக்கு தண்ணீர் பருக வந்திருந்த போதே வீட்டில் இரத்த வெள்ளத்துடன் தனது பாட்டி கிடப்பதை பார்த்து கூச்சலிட்டுள்ளார்.

இதனையடுத்து அயலவர்கள் சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதற்கமைய சம்பவம் இடத்துக்கு வந்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நீதவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலிய மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது. லிந்துலை குற்ற தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிவனொளிபாத மலைக்கு வந்த பெண் மாரடைப்பால் மரணம்

மொனராகலை பகுதியிலிருந்து சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த பெண்ணொருவர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

69 வயதுடைய பி.ஏ.சீலாவதி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது குடும்பத்தினர் சகிதம் நேற்று அதிகாலை 1 மணியளவில் சிவனொளிபாத மலை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த போதே ஊசி மலை பகுதியில் வைத்து திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

மாரடைப்பு ஏற்பட்டதை தொடர்ந்து உறவினர்கள் இணைந்து நல்லதண்ணி நகருக்கு அழைத்து வந்து அவசர அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலியா பிராந்திய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் உறுதி செய்துள்ளனர்.

அவரது சடலம் மஸ்கெலிய பிராந்திய தேசிய வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கபடவுள்ளது.

# வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வன்முறை கும்பல் தாக்குதல்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியிலுள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பலொன்று அங்கிருந்த உடமைகளை சேதம் ஏற்படுத்தி விட்டு தப்பி சென்றுள்ளது. வீட்டினுள் நேற்று முன்தினம் இரவு வேளை மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த 06 ற்கும் மேற்பட்ட வன்முறை கும்பல் வீட்டின் யன்னல் கண்ணாடிகள், கதவுகள், வீட்டிலிருந்த உடமைகள் என்பவற்றை அடித்து நொறுக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

முகமூடிகளை அணிந்து இருந்ததாகவும், தாக்குதலினால் 02 இலட்ச ரூபாவுக்கும் அதிகமான பொருட்சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் வீட்டார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தேசிய மரநடுகைத் திட்டம்



உலுக்குளம் கமநல சேவை திணைக்களத்துக்குட்பட்ட ரங்கீத்கம எனும் கிராமத்தில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் மரநடுகைத் திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விவசாய அமைச்சினால் "பழம் தரும் பல்லாண்டுப்பயிரை பயிரிடுவோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் தேசியரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற மரநடுகைத்திட்டத்தின் ஒரு அங்கமாக இந்நிகழ்வு ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதன்போது தெரிவு செய்யப்பட்ட சுமார் 200 பயனாளிகளுக்கான பல்லாண்டுப் பயிர்கள் இராஜாங்க அமைச்சரினால் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

# வடக்கின் உதயம்

கடும் காற்றுடன் கூடிய மழை

# 1500 பப்பாசி மரங்கள் அழிவு; விவசாயிகள் கவலை

(வவுனியா விசேட நிருபர்)



வவுனியா வடக்கில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக 1500 இற்கும் மேற்பட்ட பப்பாசி மரங்கள் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். வவுனியா வடக்கில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக 1500 இற்கு மேற்பட்ட பப்பாசி மரங்களும், பயன்தரு ஏனைய மரங்களும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். கடும் வெப்பமான காலநிலைக்கு மத்தியில் வடக்கில் நேற்றுமுன்தினம் மாலை (20.04) திடீரென கடும் காற்றுடன் மழை பெய்துள்ளது. இதன்போது, வவுனியா வடக்கு ஓடைவெளி கிராமத்தில் வசிக்கும் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் அறுவடைக்கு சில வாரங்களே இருந்த 1500 பப்பாசி மரங்கள் காற்றில் முறிந்து விழுந்து அழிவடைந்துள்ளன. அத்துடன், ஒலுமடு கிராமசேவகப்பிரிவிலுள்ள விவசாயிகள் பலரின் வாழ்வாதாரமாகவிருந்த பப்பாசி, வாழை, புகையிலை, கத்தரி உள்ளிட்ட தாவரங்கள் காற்றில் முறிந்து அழிவடைந்துள்ளன. தமது வாழ்வாதாரத்துக்காக மேற்கொண்ட பயிர்கள் அழிவடைந்தமை காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.



மன்னார் முசலி கல்வி வலயத்துக்குட்பட்ட வெள்ளிமலை மன்/பதியுதீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 2022ஆம் ஆண்டு தரம் 05 புலமை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 03 பேர் சித்தியடைந்துள்ளனர். எம்.ஏ.ஹஸான்(148),எம்.ஆர்.சதா (146), என்.றிப்தா (145) ஆகிய மூவருமே சித்தியடைந்துள்ளனர். பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியை ஆர்.எம். மிர்ஷாத், அதிபர் எம்.கே. றயிசுத்தீன் ஆகியோரை படத்தில் காணலாம்.

# ஆசிரியரால் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு

## பொலிஸார் விசாரணைகளை முன்னெடுப்பு

யாழ். விசேட நிருபர்

வலிகாமம் பகுதியிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையொன்றில் கற்பிக்கும் ஆசிரியரொருவர் மாணவிகளிடம் பாலியல் ரீதியான சேட்டைகளில் ஈடுபடுவதாக கிடைத்த முறைப்பாட்டுக்கமைய சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தனர். பாடசாலையில் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவிகளிடம் ஆசிரியர் இரட்டை அர்த்த வசனங்கள் பேசுதல், பாலியல் ரீதியான சேட்டைகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளில் ஆசிரியர் ஈடுபடுவதாக தெரியவருகின்றது. இதுதொடர்பில் மாணவியொருவர் பெற்றோரிடம் முறையிட்டதையடுத்து பெற்றோர், பாடசாலை அதிபரை நேரில் சந்தித்து முறையிட்டுள்ளனர். எனினும் அதிபர் பெற்றோருடன் முரண்பட்டதையடுத்து மாணவியை பாடசாலையிலிருந்து விலக்கி வேறு பாடசாலையில் சேர்த்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல்




உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்.மரியன்னை பேராலயத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது. குண்டு வெடித்த நேரமான 8.45 மணிக்கு தேவாலய மணி ஒலிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்காக இரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ஈகைச்சுடரும் ஏற்றப்பட்டது. நினைவேந்தலில் யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் கிறிஸ்தவ மதத்தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (படங்கள்: யாழ். விசேட நிருபர்)

# பாதுகாப்பு அமைச்சின் புத்தாண்டு நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்பு










பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கோட்டே, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் (19) நடைபெற்ற சித்திரை புத்தாண்டு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து சிறப்பித்தார். பாதுகாப்பு அமைச்சின் நலன்புரிப் பிரிவின் அனுசரணையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதம அதிகாரியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி சித்ராணி குணரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். நிகழ்வின் இறுதியில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு பிரதானிகளால் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## உயர்வு தாழ்வுமின்றி மனிதநேயத்தை ரமழான் நோன்பு போதிக்கிறது

### இ.தொ.கா தலைவர் நோன்புப் பெருநாள் வாழ்த்து



புனித ரமழான் நோன்பு காலத்தை நிறைவு செய்து உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் இஸ்லாமியர்களுடன் இணைந்து ரமழான் திருநாளை கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தனது ரமழான் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இஸ்லாத்தின் புனித நூலான அல்குர்ஆனில் பரிந்துரைக்கப்பட்டுள்ள வகையில் அனுஷ்டிக்கப்படும் ஒரு மாத கால ரமழான் நோன்பின் மூலம், மத ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் உலகிற்கு மிக முக்கியமான செய்தி வெளிப்படுத்தப்படுகிறது.

நோன்பு காலத்தில் பிறரது பசி பற்றிய சரியான புரிந்துணர்வுடன், விட்டு கொடுப்பு மிகுந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப இஸ்லாமியர்கள் எவ்வித உயர்வு தாழ்வுமின்றி ஒன்றிணைவார்கள் என்பது நம்பிக்கையாகும்.

இறைத் தூதர் நபிகள் நாயகத்தின் போதனைகளான ஈகை, அனைவரும் கடைப்பிடித்து, உலகில் அமைதியும், சமாதானமும் தழைத்திட, ஈகைத் திருநாளான இந்த நன்னாளில் இறை ஆசிப்பெற்று இந்நாளை இன்புற்று கொண்டாட வாழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார்.

## இஹ்திஹாத் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் ஸ்தாபகத் தலைவரின் மறைவு பேரிழப்பாகும்

### இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி

பேருவளை விசேட நிருபர்

இலங்கை இஹ்திஹாத் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான முகத்தமுஷ்ஷாதுலி அல்ஹாஜ் தலாத் இஸ்மாயில் லண்டனில் நேற்று முன்தினம் (20) மாலை காலமானார்.

அன்னாரின் மறைவு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளதாவது.

மர்ஹூம் ஷேர் மாக்கான் மாக்காரின் மகளின் புதல்வரான இவர் காலி கோட்டை ஸாவியாவின் முகத்தமுமாவார்.

இஹ்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் அமைப்பை ஸ்தாபித்து தரீக்காக்களின் வளர்ச்சிக்காகவும் ஸுன்னத் வல் ஜமாஅத் சக்தி பெறவும் மகத்தான பணி செய்தார்.

பரோபகாரியும் சமூக சேவையாளருமான தலாத் இஸ்மாயிலின் திடீர் மறைவு ஈடு செய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும். மர்ஹூம் ஸேர் மாக்கான் மாக்காரின் குடும்பத்தைச் சேர்ந்த அன்னார் ஷாதுலிய்யாத் தரீக்காவின் மூத்த இஹ்வான்களில் ஒருவராவார்.

இஹ்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் அமைப்பை ஸ்தாபித்து அதனூடாக ஆன்மீக கல்வி, சமூகப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்தார். என்னுடனும் எனது தந்தையுடனும் மிக நெருக்கமாக இருந்தார். தனது கடைசி முச்சு வரை ஸுன்னத் வல் ஜமாஅத்தை சக்தி பெறச் செய்யவும் தரீக்காக்களின் உயர்வுக்கும் தியாகத்தோடு பாடுபட்டவர். அல்லாஹ் அவரது நற்பணிகளை அங்கீகரிப்பானாக.

## இஹ்திஹாத் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் அமைப்பின்

### ஸ்தாபகத் தலைவர் காலமானார்



பேருவளை விடே நிருபர்

இலங்கை இஹ்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான முகத்தமுஷ்ஷாதுலி அல்ஹாஜ் தலாத் இஸ்மாயில் லண்டனில் நேற்று (20) மாலை காலமானார். மர்ஹூம் ஷேர் மாக்கான் மாக்காரின் மகளின் புதல்வரான இவர் காலி கோட்டை ஸாவியாவின் முகத்தமுமாவார்.

இஹ்திஹாத் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் அமைப்பை ஸ்தாபித்து தரீக்காக்களின் வளர்ச்சிக்காகவும் ஸுன்னத் வல் ஜமாஅத் சக்தி பெறவும் மகத்தான பணி செய்தார். ஸுன்னத ஜமாஅத் உலமாக்களைஆங்கிலம் கற்க வழிவகை செய்தார். அன்னார் தமது தள்ளாத வயதிலும் கூட ஸுன்னத் ஜமாஅத்தின் முன்னேற்றம், வளர்ச்சி பற்றியே சிந்திப்பவராகவும் அதற்காக உழைப்பவராகவும் வாழ்ந்தார். அன்னார் லண்டனில் காலமான செய்தி கவலை அளிக்கிறது.

வல்லநாயன் இப் புனித ரமழானில் அன்னாரது நற்செயல்களை கபூல் செய்து உயர்வான ஜென்னதுல் பிர்தவ்ஸை வழங்கியருல்வானாக.



வலம்புரி கவிதா வட்டத்தின் உபயோகத்திற்காக இரண்டு ஒலிபெருக்கிகளை வகவ கவிஞர்கள் ராஜா நித்திலன், சிந்தனைப்பிரியன் முஸம்மில் ஆகியோர் அன்பளிப்பாக வழங்கினர்.சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர்கனி, வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், பொருளாளர் ஈழகணேஷ், தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலன், கவியரங்கிற்கு தலைம தாங்கிய வதிரி சி. ரவீந்திரன், நிகழ்வின் சிறப்பதிதி ரோயல் அகடெமி பணிப்பாளர் ஏ. எம். சந்திரசேகர் ஆகியோரை படத்தில் காணலாம்.



தர்கா நகர் களு/அல்ஹம்றா மகா வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா அதிபர் ஜனாபா பஸ்லியா பாஸி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பாடசாலை பழைய மாணவர் சங்கம் அனுசரணை வழங்கியதோடு தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி அல்ஹாஜ்நஜீப் பின் அமீர் ஆலிம் அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

(படங்கள் பேருவளை விசேட நிருபர்)

## தென்கொரியா இந்தியாவுடன் நெருக்கமாக செயல்படும்

### தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த 7ஆம் திகதி புதுடில்லி வந்திருந்த தென்கொரிய வெளிவிவகார அமைச்சர், இந்தியாவுடன் கூட்டிணைந்து வர்த்தக ரீதியாக நெருங்கிச் செயல்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் பேச்சுவார்த்தை நடத்திய கொரிய வெளிவிவகார அமைச்சர் பார்க் ஜின், இரு நாடுகளுக்கு இடையிலான ஐம்பதாண்டுகால இராஜதந்திர உறவை நினைவுகூரும் வகையில் இவ்விஜயம் அமைந்ததாகவும் இரு நாடுகளுக்கு இடையிலான மிக முக்கியமான உறவு மேலும் விருத்தியடையும் என நம்புவதாகவும் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான கூட்டான பங்களிக்கும் தன்மை மேலும் வலுப்பெறுமென்றும் வர்த்தக, விநியோக சங்கிலி, முதலீடு என்பனவற்றில் மிகுந்த அக்கறை செலுத்தப்படுமென்றும், அரிதான கனிமங்கள் மற்றும் உற்பத்தித் துறையுடன் இணைந்த விநியோக முறையை மேம்படுத்தல் என்பனவற்றில் அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் தென் கொரிய தரப்பு தெரிவித்துள்ளது.

## இந்திய – பிரித்தானிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை வருட இறுதியில் கைச்சாத்தாகலாம்

### இரு தரப்பு வர்த்தகர்கள் நம்பிக்கை

இந்தியாவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இவ்வருட இறுதிக்குள் கைச்சாத்தாகலாம் என இருதரப்பு வர்த்தகர்களும் எதிர்பார்த்துள்ளனர். கடந்த பெப்ரவரியில் இந்த உடன்படிக்கை தொடர்பான ஏழாவது கட்ட பேச்சுவார்த்தை முடிவடைந்ததையடுத்து எட்டாவது சுற்று இந்தியாவில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள நிலையில் இந்த உடன்படிக்கையின் அவசியம் பற்றி பேச்சுகள் இரு தரப்பு வர்த்தகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இவ் வர்த்தக உடன்படிக்கை இறுதி செய்யப்படுமானால் இந்திய வர்த்தகத்துறையில் பிரிதானிய வர்த்தகர் மற்றும் முதலீட்டாளர்களுக்கு கிடைக்கக் கூடிய நன்மைகள் குறித்து ஆராயவென பிரித்தானிய வர்த்தக சம்மேளனத்தின் பணிப்பாளரான சைமாகுலசி ஆல்ரிட்ஜ் சமீபத்தில் மும்பை மற்றும் டில்லிக்கு தன் குழுவினருடன் விஜயம் செய்திருந்தார். இச்சம்மேளனம் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் பிரித்தானிய வர்த்தக நிலையங்களை உள்ளடக்கிய அமைப்பாகும்.

இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வருமானால் அதன் பயன்களையும் வாய்ப்புகளையும் அறுவடை செய்வதற்கு இரு தரப்பிலும் வர்த்தகர்களும் முதலீட்டாளர்களும் தயாராக இருப்பதாகவும், இந்தியா வளர்ந்து வரும் பொருளாதாரமாக இருப்பதால் பிரித்தானிய தரப்பில் வாய்ப்புகள் அதிகம் என்றும் இவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான வருடாந்த இரு தரப்பு வர்த்தகம் 29.6 பில்லியன் பவுண்களாகும். வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்தானதும் இது பெருமளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கடல்மாசு அகற்றுவதில் இந்தியக் கப்பல்கள்

### மொரிஷியஸ் பிரதமர் பாராட்டு

மொரிஷியஸ் நாட்டின் சுதந்திர தின காலப்குதியில் இந்திய கடற்படை மொரிஷியஸ் கடற்பகுதயில் சேவையாற்றியிருப்பது இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார மற்றும் வரலாற்று ரீதியான தொடர்புகளை உறுதிப்படுத்துவதாக உள்ளது என்று மொரிஷியஸ் பிரதமர் பிரவின்ட் குமார் ஜக்நாத் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டின் தலைநகரான போர்ட் லூயிஸ் துறைமுகத்துக்கு அப்பால் மூழ்கிய கப்பலால் ஏற்பட்ட கடல்மாசுகளை அகற்றி தூய்மைப்படுத்தும் பணியில் மொரிஷியஸ் கரையோரக் காவல் படையின் அழைப்பின் பேரில் இந்திய கடற்படைக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

300 கிலோவுக்கும் மேற்பட்ட மாசுப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. இதைப் பாராட்டிய மொரிஷியஸ் பிரதமர், இந்திய அரசுக்கும் இந்திய கடற்படைக்கும் நன்றி தெரிவித்தனர்.

## விவரிப்புக்கு அப்பாற்பட்ட சேவைகளை ஆற்றிவரும் மோடி

### அமெரிக்க வர்த்தக அமைச்சர் புகழாரம்

இந்தியப் பிரதமர் தொலைநோக்குப் பார்வை கொண்டவர் என்றும் இந்திய மக்களுக்காக அவரால் ஆற்றப்படும் சேவைகள் விவரிப்புக்கு அப்பாற்பட்டவை என்றும் அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஜினா ரெய்மொன்டோ மோடிக்கு புகழாரம் சூடியுள்ளார். அமெரிக்காவுக்கான இந்தியத்தூதுவர் தரஞ்சித்சிங் சிந்து இத்தகவலை தன் ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இதேசமயம் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தன் ட்விட்டர் பதிவில், அவர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்டனி பிளிங்கனுடன் உரையாடியதாகவும் பிராந்திய மற்றும் உலக நடப்புகள் குறித்து இருவரும் ஆராய்ந்ததாகவும் இது இரு தரப்பு உறவை மேம்படுத்துவதாக அமைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் ஜி20 வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு டில்லியில் நடைபெற்றபோது அதற்கு வருகை தந்திருந்த பிளிங்கன், இந்தியத் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் அவருடன் நடைபெற்ற முதல் உரையாடல் இதுவாகும். உயர் தொழில்நுட்பம், உணவு, மின்சக்தி, பாதுகாப்பு, ஒத்துழைப்பு என்பன தொடர்பில் இரு நாடுகளும் நெருங்கிச் செயல்பட ஏற்கனவே இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

## நைல்நதி ஊற்றெடுக்கும் இடத்தில் காந்திஜிக்கு அஞ்சலி

### உகண்டா விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

உகண்டா ஜின்ஜாவுக்கு இந்திய தடயவியல் பல்கலைக்கழகக் கிளையை ஆரம்பித்து வைப்பதற்காக சென்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நைல் நதி ஊற்றெடுக்கும் இடத்துக்குச் சென்று மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினார்.

காந்திஜியின் அஸ்தியின் ஒரு பகுதி நைல் நதியிலும் கரைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. உகண்டா மற்றும் மொஸாம்பிக் நாடுகளுக்கு ஐந்துநாள் விஜயம் மேற்கொண்டிருந்தபோதே காந்திஜிக்கு அஞ்சலி செய்த அவர், பின்னர் நாட்டின் ஜனாதிபதியையும் சந்தித்து இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். உகண்டா ஜனாதிபதி யோவரி முஸேவனியை அவரது ஆர்வகிதூரா பண்ணை இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய ஜெய்சங்கர், அணிசேரா நாடுகள் அமைப்பின் அடுத்த தலைமைப் பொறுப்பை உகண்டா ஏற்கவிருப்பதால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தனிப்பட்ட வாழ்த்துகளை அவரிடம் தெரிவித்தார்.

## கவிஞர் தர்கா நகர் ஸபாவின் தாயார் காலமானார்

பிரபல எழுத்தாளரும், கவிஞருமான தர்கா நகர் ஸபாவின் தாயார் உம்மு ஸஹ்தியா (94) காலமானார். அன்னாரின ஜனாஸாவில் உலமாக்கள், எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள், அரசியல் பிரமுகர்கள், தினகரன் ஆசிரியர் பீட உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். அன்னாரின் ஜனாஸா நேற்று வெள்ளிக்கிழமை 21 மாலை தர்கா நகர் தெருவு ஜும்மா பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பாஸி ஸுபைர்

# தடைகளை தகர்த்தல் மற்றும் தொழில்துறைகளை உருவாக்க பங்களிக்கும் Allianz Lanka



Allianz Lanka Women in Leadership Employee Resource Group ஆனது, Allianz Lanka நிறுவனத்தின் பெண்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், சர்வதேச மகளிர் தினத்தைக் குறிக்கும் வகையில், சிறப்பு மன்றம் ஒன்றை அண்மையில் நடத்தியது.

"Taking Charge of Getting the Career You Want and Deserve", ("நீங்கள் விரும்பும் மற்றும் உங்களுக்கு தகுதியான தொழில்துறையைப் பெறுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வது") என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்றது. இந்நிகழ்வில் John Keells குழுமத்தின் Head of Legal and Company Secretarial functions, நடிஜா தம்பையா மற்றும் MAS Holdings நிறுவனத்தில் Head of Women's Empowerment, Advocacy and Code of Conduct, தனுஜா ஜெயவர்தன ஆகிய இரண்டு முன்னணி பெண் வல்லுநர்கள் பேச்சாளர்களாக கலந்து கொண்டனர்.

Allianz Lanka வில் பணிபுரியும் 100 க்கும் மேற்பட்ட பெண் ஊழியர்கள், நிர்வாக உறுப்பினர்கள், சேனல் பங்காளர்கள் மற்றும் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் இம்மன்றம் நடைபெற்றது. சம வாய்ப்பை ஏற்றுக்கொள்ளல், விரும்பும் தொழில்துறையை தேர்ந்தெடுத்து உருவாக்குதல், தொழில் முன்னேற்றத்திற்கான பங்காளர்களை உருவாக்குதல், பணியிடத்தில் பாலின ரீதியில் பொதுப்படுத்தல் (stereotyping) நிலையை முகம்கொடுத்தல், மற்றும் நல்ல வேலைவாழ்க்கை சமநிலையை பேணுதல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

Allianz Lanka வின் பெண் ஊழியர்கள் தங்கள் தொழில்துறையை தங்களதாக்கிக் கொள்ளவும், அவர்களுக்கு தகுதியான தொழில்துறை பாதையை உருவாக்க ஊக்குவிப்பதையும், அவர்களுக்கு வலுவூட்டுவதையும் ஊக்கப்படுத்துவதையும் Allianz Lanka வின் Women in Leadership Employee Resource Group நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வின் முடிவில், பங்கேற்பாளர்கள் தங்களது தொழில்துறை மற்றும் வாழ்வில் நேர்மறையான மாற்றங்களைச் செய்ய உத்வேகம் மற்றும் உந்துதல் ஆகியவற்றை உணர்ந்தனர்.

## புதிய அருணலு மற்றும் இசுறு கணக்குகளுக்கு பணச் சேமிப்பை ஊக்குவிக்கும் கொமர்ஷல் வங்கி



புத்தாண்டு காலப்பகுதியில் பணம் பரிசாக வழங்கப்படுவது உச்சத்தை தொடும் ஒரு நிகழ்வாகும். இதனை முன்னிட்டு கொமர்ஷல் வங்கி சிறுவர்கள் மத்தியில் தமக்கு கிடைக்கும் பணத்தை வங்கியின் பிரபலமான சிறுவர் கணக்குகளில் சேமிப்பதை ஊக்குவிக்கும் வகையிலான ஒரு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

கொமர்ஷல் வங்கியில் புதிதாக அருணலு அல்லது இசுறு சிறுவர் சேமிப்புக் கணக்குகளை 2023 ஏப்பிரல் மற்றும் மே மாதங்களில்; திறக்கும் வாடிக்கையாளர்களுக்கு சுற்றாடலுக்கு சிநேகமான ஒரு உண்டியல் பரிசாக வழங்கப்படும். வங்கிக் கிளைகளுக்கு விஜயம் செய்யாமல் வீடுகளில் இருந்தவாறு பணத்தை சேமிக்கும் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட இவ்விரு சேமிப்புக் கணக்குகளையும் ஏப்பிரல் 1 முதல் மே மாதம் 31ம் திகதி வரையான காலப்பகுதியில் குறைந்த பட்சம் ஆயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையோடு திறக்கும் பெற்றோரும் சிறுவர்களும் நீண்டகாலம் பாவிக்கக் கூடிய இந்த உண்டியலைப் பெற்றுக் கொள்வர். இந்த உண்டியல் பாரம்பரியமான பிளாஸ்டிக்கிற்கு பதிலாக உலோகத்தால் செய்யப்பட்டதாகும் என வங்கி மேலும் அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் அடையாளங்களில் ஒன்றான அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் மிக அதிகமான வட்டி வீதத்தை வழங்கும் ஒரு கணக்காகும். குறைந்த பட்சம் 100 ரூபாவை வைப்பிலிட்டு கொமர்ஷல் வங்கியின் எந்த ஒரு கிளையிலும் இதை திறக்க முடியும்.

## புதிய முதலீட்டாளர்களுக்கு டிஜிட்டல் தீர்வை அறிமுகப்படுத்திய Softlogic Stockbrokers



இலங்கையின் நம்பகமான நிதிப் பங்காளியான Softlogic Capital இன் முழு சேவை வழங்கும் பிரிவான Softlogic Stockbrokers, கொழும்பு பங்குச் சந்தையில் இணையும் புதிய முதலீட்டாளர்களுக்கு முதன்முறையாக புதிய டிஜிட்டல் தீர்வை அறிமுகப்படுத்தி தொழில்துறையில் ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்தப் புதிய அறிமுகத்தின் மூலம், பங்குச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்பும் புதிய முதலீட்டாளர்கள் ஒரு மணி நேரத்திற்குள் மத்திய வைப்புத்தொகை அமைப்பில் (CDS) தங்கள் கணக்குகளைத் திறக்க முடியும். இதுவரை 2448 மணிநேரம் எடுத்தது, இது தொழிலில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 5,000க்கும் அதிகமான வாடிக்கையாளர்களை முழுமையாக டிஜிட்டல் செயன்முறையின் மூலம் அறிமுகப்படுத்தி இலங்கையின் முதல் நிறுவனமாக Softlogic நிறுவனம் மாறியதை அடுத்து இந்த புதிய அறிமுகம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 2022 இல் நிறுவப்பட்ட, இந்த ஆன்லைன் தளம் ஒரு புத்தம் புதிய டிஜிட்டல் தீர்வாகும். இது எதிர்கால முதலீட்டாளர்கள் CSE யில் எளிதாக முதலீடு செய்வதற்கு தொடர்ச்சியான டிஜிட்டல் சேவையை வழங்குவதன் மூலம் நாட்டின் பங்குச் சந்தையை முன்னேற்றுவிக்கும். இந்த டிஜிட்டல் சேவையானது உள்ளூர் பாவனையாளர்களுக்கு ஏற்றது, கணக்குகளைத் திறப்பதில் எளிதான, வேகமான மற்றும் திறமையான அனுபவத்தை வழங்குகிறது.

## இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாக 13 ஆவது தடவையாகவும் கௌரவிக்கப்பட்ட HNB



வாடிக்கையாளர் வங்கிச் சேவையில் இலங்கையின் மறுக்கமுடியாத முன்னணி நிறுவனமாக தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டு, 2023 ஆம் ஆண்டுக்கான Asian Banker Global Excellence இன் வாடிக்கையாளர் நிதிச் சேவைக்கான விருது வழங்கும் நிகழ்வில் 13வது தடவையாக இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாக HNB PLC மீண்டும் முடிசூட்டப்பட்டது.

புகழ்பெற்ற ஏசியன் பேங்கர் இதழால் நடத்தப்படும் இந்த விருது வழங்கும் நிகழ்வு, உலகின் நுகர்வோர் நிதிச் சேவைகளுக்கான மிகவும் கடுமையான மற்றும் வெளிப்படையான திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுவதுடன், ஸ்திரத்தன்மை, புத்தாக்கம், டிஜிட்டல் செயலாக்கம் மற்றும் விரைவான, நிலையான வளர்ச்சியை அறிமுகப்படுத்துவதற்கான செயல்முறை மறுபொறியியல் ஆகியவற்றில் புதிய வரையறைகளை நிறுவும் பிராந்திய நிறுவனங்களை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"எங்கள் ஸ்தாபகக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு, HNB எப்போதும் ஒருமைப்பாடு மற்றும் சேவையின் அடிப்படையில் கூட்டாண்மைகளை உருவாக்குவதில் நம்பிக்கை கொண்டுள்ளது. 135 ஆண்டுகளுக்கும் மேலாக, எங்கள் வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் எங்கள் திறன்களை தொடர்ந்து மாற்றியமைத்து, பெருமை மற்றும் பொறுப்புணர்வின் வலுவான உணர்வுடன் இந்த பாரம்பரியத்தை நாங்கள் நிலைநிறுத்தி வருகிறோம்.

இந்த வெற்றி குறித்து கருத்து தெரிவித்த HNB இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனதன் அலஸ், 13வது ஆண்டாக ஆசிய வங்கியாளர் சஞ்சிகையால் இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாக அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் பெருமையடைகிறோம் என்றார்.

## 'தீவா கைகளுக்கு வலு' திட்டம் மூலம் வட மாகாண பெண் தொழில்முனைவோரை வலுவூட்டும் தீவா



'தீவா கைகளுக்கு வலு' பயிற்சி அமர்வுகள், பெண்கள் தமது வீட்டில் உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் வழங்கும் சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பெண் தொழில்முனைவோருக்கு அவசியமான வளங்கள் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை அளித்து, அவர்கள் தன்னம்பிக்கையுடன் அவர்களது வணிகத்தில் வளர்ச்சியை மேம்படுத்த உதவுவதே 'Diva Dathata Diriya' ('தீவா தேத் தட்ட திரிய' தீவா கைகளுக்கு வலு) பயிற்சி அமர்வுகளின் நோக்கமாகும்.

அதற்கமைய, கடந்த 2023 பெப்ரவரி 21 ஆம் திகதி, Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து தங்கொட்டுவையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுகளின் வெற்றியைத் தொடர்ந்து, இந்த முயற்சியின் இரண்டாம் கட்டம் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் ஐந்து விரிவான பயிற்சி அமர்வுகளை நடத்தியிருந்தது. அந்த வகையில், உற்பத்தியாளர்கள் முதல் தொழில்முனைவோர் வரை மனநிலை மாற்றம், நிதிக் கணக்கு புத்தக பராமரிப்பு மற்றும் நிதி முகாமைத்துவம், விலை நிர்ணயம், சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவை, டிஜிட்டல் சந்தை, வர்த்தகநாம பிரபல்யத்துவம் போன்ற தலைப்புகளை இது உள்ளடக்கியிருந்தது.



## நம் முளத்தில் ஏது குறை!!

ஜவ்ஹர் கிண்ணியா

எமைப் பார்த்து நகைத்தவனும்
ஏலனமாய் சிரித்தவனும்
ஓர் நாள் திகைக்க வேணும்
எம் மவர் உயர் வளர்ச்சி கண்டு!!!

போனும் கையுமாய்
காதலும் நினைவுகளுமாய்
வீதி உலா வாராமல்
புத்தகமும் பேனாவுமாய் நீ எந்நாளும் வேணும்!!

நம் வளர்ச்சி அவரிலில்லை
மற்றவர் வாய் பார்க்க வில்லை
நம் கையே நமக்குதவி
நாளும் இதை சிந்திக்கனும்!!

நம்மயலார் உயர்கையிலே
நாம் ஏன் தூங்க வேணும்
நம் முளத்தில் ஏது குறை என்று
நாளும் இதை நினைக்க வேணும்!!

துயரங்கள் பல வரலாம்
துணையேதும் இன்றியும் போகலாம்
துணிந்தே தனித்து நின்று
போராடி வெல்ல வேணும்!!

இம் மண் உனைப் பெற்றதற்காய்
தலை குணிந்தே வீழாமல்
நிமிர்ந்து மார் தட்டி
உனைக் கண்டு மகிழ்ந்திடனும்!!

நாம் யாருக்கும் அடிமையில்லை
நமை அடக்கிடவும் யாருமில்லை
நம் கல்வி உயர்ந்திட்டால்
நானிலம் உனை என்றும் வேண்டும்!!

நீ உயர்ந்தால்
நம் மண் தலை உயரும்
மற்றவர் முன் நம் தரமுயரும்
இதை மறந்திடாமல் இருக்க வேணும்!!

## தீட்டு ஓர் சாட்டு

தீட்டு ஓர் சாட்டு
தாய்மை அறியா
மூடர்கள் செய்யும்
கொடுமையின் பாட்டு

அறியாமை வாசலில்
நுழைகின்ற மனிதன்
பெருமைக்கு சொல்லும்
அறியாமை சாட்டு

கடவுளை சொல்லியே
பதவிக்காக வாழும்
மனிதர்கள் செய்யும்
ஆணவ சாட்டு

தீமைகள் செய்பவனை
கடவுளாய் மதித்து
எழிமையின் உருவங்களை
விலக்கிட சாட்டு

வீரத்தின் பெண்ணவளை
தீட்டென்று சாட்டை
சொல்லிடும் நீயே
சமூகத்தில் தீட்டு

இறந்தவன் வீட்டில்
தீட்டு என்றால்
வாழ்வது யாருமில்லை
பூமியில் அறிவாயா

பிறந்தாலும் சாட்டு
தீட்டு என்றே
தீமைகள் செய்யும்
மனிதரின் மடமை

மனிதத்தை மதிக்கிறேன்
மனிதர்களை வெறுக்கிறேன்
மனங்களை கேளுங்கள்
எங்கே தீட்டென்று

உன்னிலும் தீட்டு
என்னிலும் தீட்டு
பிறகு எதற்கு
ஒரு சாட்டு

உணருங்கள் நீங்களும்
தீட்டு என்றே
சாட்டை நீக்கு
மனிதம் வாழட்டும்

மண்ணுக்கே சொந்தம்
மனிதர்கள் உடலும்
இதற்கு ஏனோ
தீட்டெனும் சாட்டு

மனித உணர்ந்திடு
பழமையை தகர்த்தெறி
தீட்டெனும் சாட்டை
குப்பையில் புதைத்திடு

மனிதம் வாழட்டும்
மனங்களில் மாற்றம்
இன்றே பிறக்கட்டும்
இன்றே புறப்படு

பாரதி மைந்தன்
மந்துவில்
புதுக்குடியிருப்பு



## கண்ணியமிக்க ரமலானே

இம்மை மறுமையைப் புனிதம் ஆக்கும்/
ஈமானின் இறுக்கம் பெருக்கம் ஆகும்/
இஸ்லாம் மார்க்கம் உவந்து தந்த/
இனிய ரமலானே வருக வருக/

சங்கை மிக்க ரமலான் மாதமே/
சிறப்புகள் ஊறும் உன்னத மாதமே/
நான்காம் கடமையாய் நானிலம் வந்தாயே/
நன்மைகள் எல்லாம் அள்ளித் தந்தாயே/

நின்று வணங்கிட வந்த மாதம்/
நித்தியமாக இலங்கிடும் நிறை மாதம்/
நோன்பு வைத்திட முப்பது நாட்கள்/
நற்செயல் புரிய முனைவோம் நாங்கள்/

திருக்குர்ஆன் ஈந்த கண்ணிய மாதம்/
திருமறை வசனங்களெங்கும் ஒலித்திடும் மாதம்/
தீமைகளை விட்டு விலக்கிடும் மாதம்/
திருவேதங்கள் யாவும் இறங்கிய மாதம்/

ஆயிரம் மாதங்களை விடவும் மேன்மையாம்/
ஆத்மீக லைலதுல் கத்ர் இரவின் தூய்மையாம்/
மகத்துவம் சுமந்த இந்த இரவினிலே/
மலக்குகளின் மன்னர் தரை இறங்குபவராம்/

ஏழையின் பசி அனைவரும் அறிய/
எதிர்பார்ப்புகள் எல்லாம் அடக்கி ஆள/
பொறுமை காக்க இறையின் ஏற்பாடு/
புடம் போட்டிடும் மாண்புடை மாதமாம்/

ஈருலக வாழ்விலும் நாம் சிறப்புறவே/
அடைந்தோம் ரமழான் முதல் பிறையை/
இறைவன் காட்டிய நேர்வழி
நெறியாய்/
விமோச்சனம் பெற்றிட எழுவோம் விரைவாய்/

இனிய ரமலானே வருக வருகவே/
இறைவிசுவாசம் புகட்டிட வருக வருகவே/

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்



## நோன்பின் மாண்பை எப்பொழுது உணர்வோம்

சுட்டெரிக்க என்னில்
என்ன பாவம் உள்ளது
என்பது போல் ரமழானில்
எம் உம்மத்துக்கள்

ஆயுளில் பிறந்த நாளின் அளவு
ரமழானை சந்தித்த மனிதா?
பிறந்தநாளை திட்டமிட்டு
கொண்டாடும் அளவிற்கு
ரமழானை கன்னியப்படுத்த
மறுக்கும் மரணித்த உள்ளமடா?

வருடா வருடம் ரமழான்
புனிதம் பேசி உன்னில்
இதன் புனிதம் மரணித்ததடா?
பாவம் உலமாக்கள் நா தண்ணீர்
வற்ற புகழ்பாடியதுதான் மிச்சம்

பல மணிநேரம் பட்டினிக்கு
உன் பினிதீரும் இவ்வுலகில்
இது புரியா? மானிடா
கொப்பியுடன் காலம் கழிக்கும்
காலம் வெகு தொலைவில் இல்லையடா?

எந்தக் கண்ணும் கண்டிராத
எக்காதுகளும் கேட்டிராத
எந்தக் கற்பனைவாதியாலும்
கற்பனை செய்ய முடியாத
இன்பத்தின் முடிவிலியாம்
சுவனம் செல்ல நோன்பு
நோற்க வேண்டும் மானிடா?

பாவக்கறை படிந்து கருமையாகிய
நம் உள்ளத்தை கறை நீக்கி
வெண்மையாக்கும்
பாவக் கேடயம்
நோன்புதனை அணிய
மறுக்கலாமா?

நாம் நோற்றால் தானே நம்
வாரிசும் நோற்கும்
எதிர்கால நோன்பாளிகள்
எம் கையில் தவழும்
இக்கால சிறார்கள்
சற்று சிரமப்படுவோம்
நோன்பின் பெயரில்
சுவன வாழ்விற்கு

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர்

## வரவேற்போம் ஈத் பெருநாளை

நோன்பை ஏற்றிடுவோம் மாண்பாய்
அடிவானில் தலை பிறை தெரிய
அகமெல்லாம் மகிழ்ச்சி கொள்ள
அல்லாஹ்வின் அருளாய் வந்தது நோன்பாய்
அதை அகம் மகிழ ஏற்றிடுவோம் மாண்பாய்

அல்லாஹ்வின் அருள்மிகு புண்ணியமிக்க ரமழான் மாதம்
இறையச்சம் ஊட்டும் இனிய மாதம்
துர்நடத்தை தூரமாக்கும் நல்ல மாதம்

ஆயிரம் மாதகால அமலினைச் சுமந்து
பாரெல்லாம் பகிர்ந்தே செல்லும் பாக்கியம் பெற்ற மாதம்
மனிதனை புனிதமாக்கும் இனிய மாதம்
அமல்களை அள்ளி தரும் அற்புத மாதம்

உடல் நோயும் உள் நோயும் நீக்கி எமை
உத்தமனாய் வாழ வைக்கும் மாதம்
இல்லங்களில் அருள் நிறைந்திடவும் இல்லாதோரின்
பசி அறிந்திட வந்த மாதம்

கண்ணியம் கட்டுப்பாட்டை காத்து நின்று
கருணையை ஏந்தி வரும் கீர்த்தி பெறும் மாதம்
எத்தனை இரவுகள் வந்தாலும் அத்தனைக்கும்
முத்தாய் ஆண்டவன் அருளிய மாதம்

ஏற்றத் தாழ்வின்றி ஏழைகளை அரவணைத்து
ஏற்றங்காண வைத்திடும் ஏற்றமான மாதம்
தீமைகளை தடுத்து நன்மைகளை அள்ளி கொடுக்கும்
கண்ணியமிக்க மாதம்

இறைவனிடம் அறைஞ்சி கேட்கப்படும் துஆக்கள்
ஏற்கும் இனிய மாதம்

கண்ணிய மிக்க புண்ணிய மாதம் மறுமை வாழ்வு
ஆன்மீக உணர்வை அதிகரிக்கும் பாக்கியம் பெற்ற மாதம்

இறைவனிடம் பாவமன்னிப்பு இறைஞ்ச இறை மறை
இறங்கிய மாதம்
பசித்திருந்து விழித்திருந்து தினம் பகலிரவாய் கண்
விழித்த மாதம்

வான்மறை இறங்கிய வானவரும் இறங்கிடும்
மகத்தான மாதம்
பாவக்கறையகற்றி பக்குவமாய் நாம் வாழ
படைத்த இறைவனால் பகிர்ந்தளித்த மாதம்

லைலதுல் கத்ர் எனும் இரவை தன்னகத்தே கொண்ட
தனிசிறப்பு பெற்ற மாதம்
மாதங்களின் சிறந்த மாதம் மலர்ந்தது மனம் கமழ்ந்து
மனங் கவர்ந்த மாதம்

இகபர லோகமெல்லாம் இறைவன் உன்னை நம்பி
இறைஞ்சிடும் மாந்தர்க் கெல்லாம்
இன்னருள் புரியும் நல்ரமழானே
ஐக்கியம் பேணி வாழ ஐங்கடமை போதனையால்
ஐயமின்றி சுவர்க்கம் நுழைய நல்லருள் புரிவாய் அல்லாஹ்வே

ஷவ்வால் தலை பிறை வானமதை அலங்கரிக்க
தக்பீரின் முழக்கம் உள்ளமதை மகிழ்விக்க
கவலையோடு விடைபெற்று செல்லும்
புனித ரமழானே
மகிழ்ச்சியோடு வரவேற்போம் ஈத் பெருநாளை
அல்லாஹு அக்பர் வலில்லாஹி ஹம்து

தேசகீர்த்தி – எம். நிசாம்தீன்

# இரண்டாவது டெஸ்டில் சுழல் வீரர் ஹேமன்த இணைக்கப்பட வாய்ப்பு



அயர்லாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸால் மிகப்பெரிய வெற்றியை பெற்ற இலங்கை அணி இரண்டாவது டெஸ்டிலும் வென்று தொடரை முழுமையாகக் கைப்பற்றும் நோக்கில் இன்று (22) காலியில் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி காலி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் வரும் திங்கட்கிழமை (24) ஆரம்பமாகவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் மூன்று நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்ட இலங்கை அணி மீண்டும் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட அதே 15 பேர் கொண்ட குழாத்தை இரண்டாவது டெஸ்டுக்கும் தேர்வுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

எனவே, தொடர்ந்து வெற்றியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டே அணித் தேர்வு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இரண்டாவது டெஸ்டில் அணியில் சில மாற்றங்கள் இடம்பெற வாய்ப்பு உள்ளது. வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோவுக்கு பதில் வலது கை 'லெக் ஸ்பின்' சுழற்பந்து வீச்சாளர் துஷான் ஹேமன்த அணியில் சேர்க்கப்பட்ட வாய்ப்பு உள்ளது. எனினும் இது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இன்றும் நாளையும் இடம்பெறும் பயிற்சிக்குப் பின்னரே இரண்டாவது டெஸ்டில் ஆடவிருக்கும் இறுதி அணி தேர்வு செய்யப்படவுள்ளது.

இதில் ஹேமன்தவுக்கு வாய்ப்புக் கிடைத்தால் அது அவரது கன்னி டெஸ்ட் போட்டியாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் டெஸ்ட் போட்டியில் இரண்டு நாட்கள் மிதமிருக்க தோல்வியை சந்தித்த அயர்லாந்து அணியும் இரு நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டது. எனினும் தற்போது நிலவி வரும் கடும் வெப்பமான காலநிலை அந்த அணிக்கு அதிகம் பாதிப்பாக உள்ளது.

இரு அணிகளும் ஒரே ஹோட்டலில் தங்கி நட்புறவுடன் உள்ளன.

முதல் டெஸ்டுக்கு பின்னர் இலங்கை வீரர்கள் சிலர் கொழும்பு திரும்பி புத்தாண்டு காலத்தை தமது உறவினர்களுடன் செலவிட்டு விட்டு மீண்டும் அணியுடன் இணைந்துள்ளனர்.

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

காரைதீவு குறூப் நிருபர்



கனடா ELSON பூப்பந்தாட்ட கழகத்தால் கிழக்கு மாகாணத்தில் முதல்முறையாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் (19) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கனடாவிலிருந்து வருகை தந்த அ. ஜெயகாந் ELSON பூப்பந்தாட்ட கழகத்தின் அனுசரணையில் இவ் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட பூப்பந்தாட்ட வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதனை தொடர்ந்து வீரர்களுக்கான பயிற்சி முகாமும் இடம்பெற்றது.

## மட்டக்களப்பு மெய்வல்லுனர் தலைவராக ஈஸ்பரன் தெரிவு



மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட மெய்வல்லுனர் சங்க வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும் வெபர் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் தலைவர் பாலித பெர்னான்டோவின் வேண்டுகோளுக்கிணங்க அவரின் பிரதிநிதியாக அலோசிய் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். இந்நிகழ்வில் தலைவராக வி. ஈஸ்பரன், செயலாளராக கே. நிலக்ஷன் மற்றும் பொருளாளராக ஏ.ஜே. குருஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு நிர்வாக குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சலஞ்சர்ஸ் இல்லம் சம்பியன்



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் விளையாட்டு தின விழாவில் சலஞ்சர்ஸ் இல்லம் சம்பியனாகத் தெரிவானது.

தனது கலாசாரப் பெறுமதிகளை கொண்டாடும் வகையில் அண்மையில் இடம்பெற்ற இந்த விளையாட்டு விழாவில் நான்கு இல்லங்கள் பங்கேற்றன. இதில் ஜயன்ட்ஸ் இல்லம் இரண்டாவது இடத்தை பிடித்ததோடு போட்டியில் பங்கேற்ற டைடன்ஸ் மற்றும் ரோயல்ஸ் இல்லங்களும் திறமையை வெளிப்படுத்தின.

## உலகக் கிண்ண வலைப்பந்து குழாத்தின் பயிற்சியில் தர்ஜினி சிவலிங்கம் பங்கேற்பு



இந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண வலைப்பந்து போட்டிக்கு பயிற்சி பெறும் இலங்கை குழாத்துடன் பயிற்சிக்காக இலங்கை சிரேஷ்ட வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம் இணைந்துள்ளார்.

அவர் இதுவரை நடைபெற்ற எந்த ஒரு பயிற்சி அல்லது தேர்வுப் போட்டிக்கும் பங்கேற்கவில்லை என்பதோடு, தனிப்பட்ட வேலைக்காக அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கை வந்த நிலையில் கடந்த புதனன்று (19) சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்ற பயிற்சியில் இணைந்தார். எவ்வாறாயினும் அவர் கடந்த வியாழக்கிழமை (20) இரவு மீண்டும் அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டுச் சென்றிருப்பதோடு, உலகக் கிண்ணத்திற்காக அவுஸ்திரேலியா மற்றும் பொட்ஸ்வானாவுக்கு எதிரான பயிற்சிப் போட்டிகளில் பங்கேற்க விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

தர்ஜினி தற்போது அவுஸ்திரேலியாவின் வலைப்பந்து அணி ஒன்றில் இணைந்து லீக் தொடர் ஒன்றில் ஆடி வருவதோடு, அதனால் அவருக்கு இந்நாட்டில் இடம்பெற்ற தெரிவுப் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் வலைப்பந்து தேர்வுக் குழு தேசிய விளையாட்டுத் தேர்வுக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் அவரை உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்கும் இலங்கையின் இறுதி 12 வீராங்கனைகளில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## தென்னாபிரிக்க ஏ இலங்கை பயணம்



தென்னாபிரிக்க ஏ அணி இலங்கைக்கு விஜயம் செய்து 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 நான்கு நாட்கள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

இதன்படி, 3 ஒருநாள் போட்டிகள் முறையே ஜூன் 4, 6 மற்றும் 8ஆம் திகதிகளிலும், நான்கு நாட்கள் போட்டிகள் ஜூன் 12 மற்றும் 22ஆம் திகதிகளிலும் நடைபெற உள்ளது. எனினும், போட்டி நடைபெறும் மைதானங்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்தத் தொடருக்கான ஒளிபரப்பு உரிமையை பெற விரும்பும் ஊடக நிறுவனங்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்த முடியும் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை ஏ கிரிக்கெட் அணி இறுதியாக இங்கிலாந்து லயன்ஸ் அணியுடன் கடந்த பெப்ரவரி போட்டியிட்டதுடன், 2 போட்டிகளைக் கொண்ட நான்கு நாட்கள் தொடர் 0–0 என சமநிலையில் முடிவடைந்த நிலையில், ஒருநாள் தொடரை 2–1 என இலங்கை ஏ அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## டெல்லி, பெங்களூர் வெற்றி




இந்திய பிரீமியர் லீக் தொடரில் கடந்த வியாழக்கிழமை (20) நடைபெற்ற இரு போட்டிகளில் டெல்லி கெபிடல்ஸ் மற்றும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் வெற்றியீட்டின.

முதல் போட்டி கொல்கட்டா நைட்ரடர்ஸ் மற்றும் டெல்லி கெபிடல்ஸ் அணிகளுக்கு இடையே நடைபெற்றதோடு முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கட்டா அணி 20 ஓவர்களுக்கும் 127 ஓட்டங்களுக்கு சுருண்டது. பதிலெடுத்தாடிய டெல்லி அணி 19.2 ஓவர்களில் ஆறு விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இதேவேளை பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 24 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய பஞ்சாப் அணி 18.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 150 ஓட்டங்களையே பெற்றது.

## பாக்.–நியூசி அணிகளின் போட்டி மழையால் ரத்து



பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டி20 போட்டி மழையால் பாதியிலேயே கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் பாகிஸ்தான் அணி தொடர்ந்து 2–1 என முன்னிலையில் உள்ளது.

ராவல்பிண்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நியூசிலாந்து அணி 18.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது.

தொடர்ந்து கடும் மழை பெய்ததால் ஆட்டத்தை தொடர்ந்து நடத்த முடியாமல் போனது.

இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவது மற்றும் இறுதி டி20 போட்டி வரும் திங்கட்கிழமை (24) இதே ராவல்பிண்டியில் நடைபெறவுள்ளது.

## டயலொக் அனுசரணையில் 'புனிதர்களின் சமர்" போட்டி



டயலொக் எக்சியாட்டா பிஎல்சி அனுசரணையில் கொழும்பு புனித ஜோசப் கல்லூரி மற்றும் புனித பீட்டர்ஸ் கல்லூரிகளுக்கு இடையிலான 89ஆவது "புனிதர்களின் சமர்" மாபெரும் கிரிக்கெட் போட்டி எஸ்.எஸ்.சி மைதானத்தில் வரும் ஏப்ரல் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடிய அரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டி இம்முறை ரசிகர்கள் மற்றும் மாணவர்களின் பங்கேற்புடன் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இந்தப் போட்டியை நேரடியாக ஒளிபரப்புச் செய்ய டயலொக் எக்சியாட்டா பிஎல்சி ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் முதல் இன்னிங்ஸ் 60 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு நடைபெறுவதால் முடிவொன்றை எட்டும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதில் புனித ஜோசப் கல்லூரிக்கு விக்கெட் காப்பாளர் சதீஷ் ஜயவர்தன தலைமை வகிப்பதோடு புனித பீட்டர்ஸ் கல்லூரிக்கு திமுத் குணவர்தன தலைவராக செயற்படுகிறார்.

## உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கு தயாராக சிம்பாப்வே அணி, பாக். ஏ அணியுடன் பலப்பரீட்சை



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கு தயாராகும் வகையில் சிம்பாப்வே அணி சொந்த மண்ணில் பாகிஸ்தான் ஏ அணிக்கு எதிராக ஆறு ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது.

இலங்கை உட்பட பத்து அணிகள் பங்கேற்கும் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி ஜூன் 8 தொடக்கம் ஜூலை 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு தகுதிபெறும்.

இந்நிலையில் இந்த தகுதிகாண் போட்டிகளுக்கு முன்னர் பாகிஸ்தான் ஏ அணி சிம்பாப்வேயுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. சிம்பாப்வே மற்றும் பாகிஸ்தான் ஏ அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி வரும் மே 17 ஆம் திகதி டகாசிங்கா கிரிக்கெட் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து எஞ்சிய ஐந்து போட்டிகளும் முறையே மே 19, 21, 23, 25 மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.